பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 20 செவ்வாய்க்கிழமை (04-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:98

# ஒப்பந்தத்தில் நிறைவேற்றப்படாத விடயங்களுக்கு உடன் தீர்வு வேண்டும்!



வே.பிரபாகரன்

## அடுத்த கட்டப் பேச்சில் வலியுறுத்தும்படி பாலாவிடம் தலைவர் பிரபா தெரிவிப்பு!



அன்ரன் பாலசிங்கம்

கிளிநொச்சி,மார்ச்4

**போர்நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையில் இன்னமும் நிறைவேற்றப்படாத விடயங்களுக்கு விரைவில் தீர்வு காணவேண்டும் என்று அடுத்த கட்டப் பேச்சில் வலியுறுத்த வேண்டும்.**

**விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்திடம் தலைவர் வே.பிரபாகரன் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.**

லண்டனில் இருந்து வந்துள்ள அன்ரன் பாலசிங்கமும் தலைவர் பிரபாகரனும் வன்னியில் நேற்று நீண்ட நேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதுவரை இடம்பெற்ற பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் பேச்சில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாகவும் பாலசிங்கம் விளக்கினார். அவற்றின் சாதக பாதகங்கள் குறித்து இருவரும் நீண்ட நேரம் விவாதித்தனர். (14ஆம் பக்கம் பார்க்க)

புதிதாக விசேட மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கே திறைசேரி நிதி ஒதுக்கீடு

## வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர் நியமனம் இப்போதைக்கு இல்லை!

### கண்டனம் தெரிவித்து திருமலையில் சத்தியாக்கிரகம்

திருகோணமலை,மார்ச்4

வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர்கள் ஆயிரம் பேருக்கு கடந்த பெப்ரவரி மாதத்தில் நியமனம் வழங்கப்படும் என்று அரசாங்கம் அளித்த வாக்குறுதி காற்றில் பறக்கவிடப்பட்டுவிட்டது. அந்த நியமனங்கள் இனி இப்போதைக்கு இல்லை. புதிதாக விசேட ஜி.சீ.ஈ. உயர்தர ஆசிரியர்கள் ஆயிரம் பேருக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் ஆயிரம் பேருக்கும் மட்டுமே திறைசேரி சம்பளப்பணம் ஒதுக்கியிருக்கிறது. தொண்டர் ஆசிரியர் தொடர்பாகத் தேசியக் கொள்கை உருவாக்கப்பட்ட பின்னரே அவர்களின் நியமனத்துக்கு சம்பளப்பணம் ஒதுக்கமுடியுமாம்!

இதனால் தொண்டர் ஆசிரியர்கள் ஏமாற்றமும், ஆத்திரமும் அடைந்து தமது கண்டனத்தைத் தெரிவிப்பதற்காக திருகோணமலையில் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அதைத் தவிர்க்க பொலீஸார் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது. சத்தியாக்கிரகி ஒருவரை பொலீஸார் விசாரணைக்காக பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். அதனால் முறுகல் நிலை ஏற்பட்டது. மேலிடத்தின் தலையீட்டால் அந்த நபரைப் பொலீஸார் விடுவித்தனர். அவர் திரும்பிச் சென்று சத்தியாக்கிரகத்தில் இணைந்துகொண்டார்.

வடக்கு - கிழக்கில் 3 ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கு உலக வங்கி 2000 ஆம் ஆண்டிலேயே அனுமதி வழங்கிவிட்டது. எனினும், பல்வேறு காரணங்களால் அவர்களின் நியமனம் இழுத்தடிக்கப்பட்டு வந்தது. இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அடிக்கடி வலியுறுத்தி வந்ததினால் இம் மாதம் நியமனங்களை வழங்க உறுதி அளிக்கப்பட்டு இருந்தது.

ஆனால், ஆச்சரியம் என்னவென்றால் கல்வியமைச்சின் செயலாளருக்கு திறைசேரியிடமிருந்து வந்த கடிதத்திலிருந்து ஆயிரம் உயர்தர ஆசிரியர்களுக்கும், ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்குமான சம்பளம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரியவந்திருக்கிறது.

ஆனால், தொண்டர் ஆசிரியர் தொடர்பாகத் தேசியக் கொள்கை ஒன்றை கல்வி அமைச்சு உருவாக்கித் தந்த பின்பே அவர்களுக்கு சம்பளப் பணம் ஒதுக்கீடு செய்வது பற்றித் தீர்மானிக்க முடியுமென்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி வடக்கு - கிழக்கின் ஆயிரம் தொண்டராசிரியர்கள் நியமனம் இப்போதைக்கு இல்லை. அது மேலும் இழுத்தடிக்கப்படவுள்ளது என்பது தெளிவாகிவிட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறை உண்ணாவிரத கைதிகளை அமைச்சர் மிலிந்த வெள்ளியன்று சந்திப்பார்

### 41 பேரின் போராட்டம் 4 ஆவது நாளாகத் தொடர்கிறது

கொழும்பு,மார்ச்4

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 41 தமிழ்ச் சிறைக்கைதிகளின் சாகும்வரையான உண்ணாவிரதம் தொடர்ந்து நடைபெறுகிறது. கடந்த முதலாம் திகதி முதல் அவர்கள் உண்ணாவிரதமிருந்து வருகின்றனர்.

உண்ணாவிரதமிருக்கும் இக்கைதிகளை விஞ்ஞான தொழில்நுட்ப, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நேரில் சந்திப்பாரென சிறைச்சாலைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தமது வழக்குகளை வடக்கு - கிழக்கிலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றும்படி இக்கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். வழக்குகள் வேண்டுமென்றே தாமதப்படுத்தப்படுவதாக கைதிகள் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

நியாயமான தீர்வு கிட்டும்வரை உண்ணாவிரதம் தொடருமென கைதிகள் தெரிவிக்கின்றனர். (ம)

கண்டி வீதியில் நேற்று நடந்த

## வீதி விபத்தில் இளம் பெண் பலி!

கிளிநொச்சி,மார்ச்4

கிளிநொச்சிக்கும் பரந்தனுக்கும் இடையில் கண்டிவீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இளம்பெண் ஒருவர் உயிரிழந்தார்.

நான்கு மாதங்களுக்கு முன்னரே திருமணமான கருணாகரன் - கல்பனா (வயது 20) என்ற இளம் பெண்ணே உயிரிழந்தவராவார்.

இறந்தவர் மற்றொருவருடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்த சமயம் டிராக்டர் ஒன்றுடன் மோதியதாகவும் - விபத்தில் சிக்கி தலையில் படுகாயம் அடைந்த பெண் பின்னர் மரணமானதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவத்தில் காயம் அடைந்த சிவகாமி சிவராணி என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் தமிழீழ நீதிமன்ற நீதியாளர் செந்தூர் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டதுடன் விசாரணைகளையும் நடத்தினார். (ம-3)

## சிப்பாயின் பிணை மனு குறித்து தமிழீழ நீதிமன்று ஆராய்ந்தது

கிளிநொச்சி,மார்ச்4

கிளிநொச்சி தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவுப்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிப்பாயை பிணையில் விடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று விரிவாக ஆராய்ந்தது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி வெலிஓயாவில் உள்ள விடுதலைப்புலிகளின் நிலைகளுக்குள் ஊடுருவிய சமயம் தமிழீழ காவல்துறையால் கைது செய்யப்பட்ட நிமால் குமாரகே என்ற சிப்பாய் கிளிநொச்சி தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவுப்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிப்பாயை பிணையில் விடுமாறு கோரி சிப்பாய் சார்பில் ஆஜராகியுள்ள சட்டவாளர் வேலவர் தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று நீதியாளர்களான சிறீதரன், கல்கி, செந்தூர் ஆகியோர் முன்னிலை (14ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவு பிரதேச சபையை இயங்க வைக்க முடியாத நிலை

கடற்படையினர் முகாமிட்டுள்ளதால்

நெடுந்தீவு,மார்ச்4

நெடுந்தீவு பிரதேச சபையின் கட்டடத்தில் கடற்படையினர் முகாமிட்டுள்ளதால் பிரதேச சபையை இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கு முறையிடப்பட்டுள்ளது. யாழ். உள்ளூராட்சித் திணைக்களம் இந்த முறையீட்டைச் செய்துள்ளது.

நெடுந்தீவுப் பிரதேச சபையின் நிர்வாகம் ஈ.பி.டி.பி.வசம் இருந்த சமயம் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட ஈ.பி.டி.பியினர் மீண்டும் அங்கு சென்று தரையிறங்கினர். அவர்களுக்குப் பாதுகாப்பாக கடற்படையும் நெடுந்தீவில் தங்கியது.

பிரதேச சபையின் கட்டடத்திலேயே அவர்கள் முகாமிட்டுத் தங்கியிருக்கின்றனர்.

தற்சமயம் நெடுந்தீவுப் பிரதேச சபை கலைக்கப்பட்டு சபையின் செயலாளரிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆனால், சபையின் கட்டடத்தில் கடற்படையினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பதால் சபை நிர்வாகத்தை நடத்த முடியாதிருப்பதாக செயலா (14ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா வழங்கிய 8 வார யுத்தப் பயிற்சி முடிவு

கொழும்பு,மார்ச்4

அம்பாந்தோட்டைப் பகுதியில் இலங்கை இராணுவ வீரர்களுக்கு அமெரிக்க யுத்த ஆலோசகர்கள் எட்டு வாரங்களாக வழங்கி வந்த விசேட பயிற்சி முடிவுற்றுள்ளது.

"பிளொக்பெரே" என அழைக்கப்படும் இந்த யுத்தப்பயிற்சியை இரு ஆலோசகர்களும் 60வீரர்களும் வழங்கியுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ன தெரிவித்தார்.

இப்பயிற்சி முகாமில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 200 வீரர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். சுடற்சமர் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

எல்சல்வடோர் நாட்டைச் சேர்ந்த இராணுவத்தினருக்கு 'பிளொக்பெரே' வழங்கிய பயிற்சிக்குப் பின்னர் பாரிய அளவில் நடைபெற்ற பயிற்சி இதுவாகும் - என்றும் பிரிகேடியர் தெரிவித்தார். (ம)

## விமானப்படைச் சிப்பாய்கள் மோதல் துப்பாக்கிச் சூட்டில் கோப்ரல் மரணம்!

### ஹிங்குராங்கொட முகாமில் சம்பவம்

கொழும்பு,மார்ச்4

விமானப்படைச் சிப்பாய்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் கோப்ரல் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியானார்.

ஹிங்குராங்கொட முகாமில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கடமைக்குச் செல்ல மறுத்ததாகக் கூறப்படும் சிப்பாய் ஒருவரை விமானப்படைக் கோப்ரல் தாக்கினார் என்றும் (14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## நெடுந்தீவில் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில்

# புதிய காவலரண் அமைப்பதில் கடற்படை; யுத்தநிறுத்த மீறல் என மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

நெடுந்தீவில் குடியிருப்புகளை அண்டிய பிரதேசங்களில் புதிய காவலரண்களை அமைக்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். இச்செயல் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல். இச்செயல் மக்களை கடும் விசனத்துக்குள்ளாக்கியுள்ளது.

நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் யுத்த நிறுத்தக் கணகாணிப்புக் குழுவிடம் மேற்கண்டவாறு முறையிட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நெடுந்தீவில் முகாம் அமைத்துள்ள கடற்படையினர் குடியிருப்புப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் பனை மரங்களைத் தறித்து புதிய காவலரண்களை அமைக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இச்செயலானது மக்களைப் பீதிக்குள்ளாக்கியுள்ளது. நெடுந்தீவில் முக்கிய வளமான பனை மரத்தைப் பாதுகாப்பதற்கு மக்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில் முயற்சிகள் மேற்கொண்டுவரும் இவ்வேளையில், படையினரின் இச்செயலானது மிலேச்சத்தனமானது.

இது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும். இதனால் மக்கள் கடும் விசனத்துக்குள்ளாகியுள்ளனர். எனவே இச்செயலை உடனடியாகத் தடுப்பதற்கு ஆவன செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம். - என்றுள்ளது.

இந்த முறைப்பாடு அடங்கிய கடிதம் பிரதமர், யாழ்.அரச அதிபர், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், யாழ்.அரசியல் துறையினர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ம-3)

## நாடாளுமன்றம் இன்று கூடும்

நாடாளுமன்றம் இன்று காலை 10 மணிக்கு கூடும். பொதுச்சேவை சேமலாபநிதி (திருத்தம்) சட்டமூலம், சுங்கக்கட்டளை சட்டத்தின் கீழான தீர்மானம், மதிப்பீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் ஆகியவற்றை சபையில் விவாதத்துக்கு எடுப்பதென கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

## பதுளை பஸ் ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தம்

கொழும்பு,மார்ச்4

பதுளை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சபைசாலை முகாமையாளர் தாக்கப்பட்டதை ஆட்சேபித்தே இவ்வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதலுக்கு உள்ளான முகாமையாளர் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ம)

## சம்மாந்துறைப் பிரதேசத்தில் ஐந்து பின்தங்கிய கிராமங்கள் ஒளிபெறும்

### அன்வர் எம்.பியின் முயற்சியால் நிதி ஒதுக்கீடு

காரைதீவு,மார்ச்4

சம்மாந்துறைப் பிரதேசத்தில் இதுவரை மின் இணைப்பு இல்லாத ஐந்து பின்தங்கிய கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைக்கவிருக்கின்றது. அம்பாறை மாவட்ட மு.கா.நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரியவுடன் நடத்திய பேச்சுகளையடுத்தே இதற்கான நிதி கிடைத்திருக்கிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கிராமிய மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் இதற்கென 2கோடி 25 லட்ச ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மத்தியமுகாம் 7ஆம் கொலனி, 4ஆம் கொலனி, சவளக்கடை, வீரச்சோலை, அன்னமலை ஆகிய ஐந்து கிராமங்களுக்கே மின்சக்தி வழங்கப்படவிருக்கிறது. வீரச்சோலைக்கு 55 லட்ச ரூபாவும், அன்னமலைக்கு 50 லட்ச ரூபாவும், 4ஆம் கொலனிக்கு 44 லட்ச ரூபாவும், 7ஆம் கொலனிக்கு 37 லட்ச ரூபாவும், சவளக்கடைக்கு 36 லட்ச ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மின்சக்தி அமைச்சின் மேலதிக பொது முகாமையாளர் ரி.இராஜேந்திரா (பொறியியலாளர்)வின் உதவியுடன் மின் இணைப்பு வேலைகள் துரிதமாக நடைபெறுமென அன்வர் இஸ்மாயில் எம்.பி.நம்பிக்கை தெரிவித்தார்.

இதற்கிடையே, நிந்தவூர், அட்டாளைச்சேனை பிரதேச உப மின் அலுவலகங்கள் விரைவில் தரமுயரும். அவற்றுக்கு வாகனம் மற்றும் தொலைபேசி வசதி என்பனவும் கிடைக்கவுள்ளன. அன்வர் இஸ்மாயில் எம்.பி. கொழும்பில் அமைச்சர் கரு ஜயசூரியவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதன் பயனாகவே அந்த அலுவலகங்கள் தரமுயர்த்தப்படவிருக்கின்றன. (ம)

# கட்சி பேதங்களை மறந்துவிட்டு நாட்டின் நலனுக்காக ஒன்றுபட ஜனாதிபதி அழைப்பு

### பூரண ஒத்துழைப்பு வழங்குவேன் என்று கூறுகிறார்

கொழும்பு,மார்ச்4

கருத்து வேறுபாடுகளை, குறுகிய அரசியல் இலாபங்களை, பதவி மோகத்தை ஒதுக்கிவைத்துவிட்டு நாட்டின் நலன்களைக் கருத்தில் கொண்டு இரு தரப்புத் தலைவர்களும் ஒன்றுபடவேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஊவா வானொலி நிலையத் திறப்புவிழாவில் பேசியபொழுதே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்தார்.

ஜனாதிபதி அங்கு மேலும் பேசியதாவது:-

யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாட்டின் தலைவியைப் போன்று அமைச்சரவையின் தலைவியும் நானே. ஆயினும், சகவாழ்வு அவசியம் என்பதால் எனக்கிருக்கும் அதிகாரங்கள் அனைத்தையும் அமைச்சர்களுக்கு வழங்கியிருக்கிறேன். சகவாழ்வு இன்னமும் சரியாக நடைபெறவில்லை.

சக வாழ்வு மிகக் கஷ்டமாக நடைபெறும் ஒரு வேளையில் அதற்கு கைகொடுக்க ஓர் அமைச்சராக இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் முன்வந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

எனது தரப்பில் நான் பேசமுடியும். மற்றவர்கள் குறித்து நான் பேசமுடியாது. சகவாழ்வு அரசாங்க முறையைக் கொண்டு நடத்தத் தேவையான ஒத்துழைப்பை எனது தரப்பில் வழங்கியிருக்கிறேன். மற்றத் தரப்பில் அது நடந்திருக்கிறதா என்பதே கேள்வி.

நாட்டுக்காக உழைக்க கட்சி பேதங்களை மறந்து அனைவரும் செயற்பட வேண்டுமென யோசனை தெரிவிக்கிறேன். இதற்காக எனது ஒத்துழைப்பை வழங்குவேன்.

சுதந்திரத்துக்குப் பின்னர் குறிப்பாக கடந்த இரு தசாப்தங்களில் நாட்டுக்குத் தலைமைதாங்கியோரில் பெரும்பாலானோரின் குறைபாடுகளினால் நாடு இன்றைய நிலைக்கு உள்ளாகியிருக்கிறது. இது மக்களின் பிரச்சினையால் ஏற்பட்டதல்ல, நாட்டின் நலனுக்காக நாம் அனைவரும் சேவையாற்றவேண்டும். அது செய்ய முடியாததொன்றல்ல. அதைச் செய்ய இரு தரப்புத் தலைவர்களும் தயாராக வேண்டும்.

எதிர்காலத்தில் இதனைவிட ஐக்கியமாகச் செயற்பட நான் முற்படுவேன். அண்மையில் மலேஷியாவுக்குச் சென்றிருந்தபோது அந்நாட்டின் அபிவிருத்தியைக் கண்டேன். சுதந்திரம் கிடைத்தபோது ஆசியாவில்



இலங்கை அபிவிருத்தியடைந்த நாடாகவே இருந்தது. இன்றைய நிலையை எண்ணிப் பார்க்கும்போது வெட்கப்பட வேண்டியிருக்கிறது.

- இவ்வாறு அவர் கூறினார். (ம)

## நீடித்த சமாதானத்துக்காக தவக்காலத்தில் பிரார்த்திப்போம்

### யாழ். ஆயர் வேண்டுகோள்

போரின் கார் மேகங்கள் உலக சமாதானத்தை அச்சுறுத்திக்கொண்டிருக்கும்போது மத்திய கிழக்குப் பகுதியில் போர் வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளவேளையில், கிறிஸ்தவர்களின் தவக்காலத்தின் முதல் தினமான மார்ச் 5ஆம் திகதி - திருநீற்றுப் புதனை - நோன்பு செப-தப தினமாக அனுசரிக்கும்படி பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

- இவ்வாறு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்துள்ளார். தவக்காலம் தொடர்பாக அவர் அனுப்பி வைத்த செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உலக அரங்கில் போர் தவிர்க்கப்படமுடியாத ஒன்று அல்ல எனப் பாப்பரசர் தெளிவாகத் தெரிவித்தார். 'பெற்றுக்கொள்வதை விட கொடுத்தலே ஆசீர்மிக்கது' என்னும் தலைப்பில் 2003ஆம் ஆண்டிற்குரிய தவக்காலச் செய்தியை அவர் அமைத்துள்ளார். கிறிஸ்தவர்கள் உலக சமாதானத்திற்காக தமது வேண்டுதல்களை இரண்டு மடங்காக்கி அர்ப்பணித்துக் கொடுப்போம் என அவர் கேட்டுள்ளார்.

இந்த நாளில் சமாதானத்தை விரும்பும் அனைவரும் உலக சமாதானத்திற்காகவும் குறிப்பாக எமது மண்ணின் நீடித்த அமைதிக்காகவும் நோன்பிலும் செபத்திலும் ஈடுபட வேண்டுமென அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

திருச்செபமாலை ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்ட இந்த ஆண்டில் மரியன்னையின் முக்கிய தலங்களில் ஒன்றுகூடி சமாதானத்தின் கருவியாகிய செபமாலையை செபிப்போம்.

இன்று எமது நாட்டில் தோன்றியுள்ள சமாதானச் சூழலானது நிரந்தரமானதாக மாறவும் தமிழ் மக்கள் அனைவரும் அமைதியும் சமாதானமும் நிறைந்த ஓர் எதிர்காலத்தை பெற்று வாழவும் மரியன்னையிடம் வரம வேண்டுவோம்.

அருளின் காலமான தவக்காலத்தை ஆரம்பிக்கும் நாம் எமது நோன்பையும் செபங்களையும் உலக சமாதானத்திற்காகவும் எமது மண்ணின் நீடித்த அமைதிக்காகவும் அர்ப்பணித்துக் கொடுத்து "பெற்றுக்கொள்வதைவிட கொடுத்தலே ஆசீர்மிக்கது" என்ற வார்த்தைகளுக்கு உகந்த வாழ்வு வாழ்வோம். - என்றுள்ளது. (ம)

# பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்றுமுதல் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் திட்டமிட்டபடி தமது தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தினை நேற்று ஆரம்பித்துள்ளது.

தம்மால் முன்வைக்கப்பட்ட பல கோரிக்கைகள் தொடர்பாக பல்கலை நிர்வாகம் எந்தவித நடவடிக்கைகளையும் இதுவரையும் எடுக்காததைக் கண்டிக்கும் வகையிலேயே ஊழியர் சங்கம் இந்த தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் நேற்றுக் குதித்தது.

போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து பதில் துணைவேந்தர் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர், பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மற்றும் பதில் பதிவாளர் ஆகியோர் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

இந்தச்சந்திப்பில் பராமரிப்பு ஊழியர்களை உடனடியாகச் சேவையில் உறுதிப்படுத்துவதையும் நூலக ஊழியர்களுக்கு வழங்கவேண்டிய நிலுவைக் கொடுப்பனவுகளை புதன்கிழமைக்கு முன்வழங்குவதெனவும் சம்மேளன வருடாந்த பொதுக்கூட்ட பிரயாணச்செலவையும் புதன்கிழமைக்கு முன் வழங்குவதெனவும் பதில் துணை வேந்தர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், ஆய்வு கூட உதவியாளர் சப்பாத்து மற்றும் ஊழியர்களின் சீருடைக்கொள்வனவின் போது ஊழியர் சங்கப் பிரதிநிதி ஒருவரும் சமுகமளிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் பேரவை ஏற்றுக்கொண்டதாக அவர் எழுத்து மூலம் உறுதியளித்துள்ளார்.

சுகாதார சேவை ஊழியர் பதவி உயர்வு, ஆய்வுகூட உதவியாளர், சீருடை வகை போன்ற பிரச்சினைகது உடனடியாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு தெளிவான பதிலை பெற்றுத்தருவது என்ற விடயத்திலும் இணக்கம் காணப்பட்டது.

தமது கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தும் விதத்திலேயே இன்றைய கலந்துரையாடலின் பெறுபேறு அமையும் என்று ஊழியர் சங்கம் தெரிவித்தது.

கடந்த சில மாதங்களாக தாம் ஏமாற்றப்பட்டு வந்துள்ளமையால் இம்முறை உறுதியான முடிவைப் பெற்றுக்கொள்ளும் வரை தமது தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் - ஊழியர் சங்கம் உறுதியாகத் தெரிவித்தது.

இன்றும் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் எனவும் நாளை புதன் கிழமை நடைபெறவுள்ள வெளிவாரிப் பரீட்சைகள் தொடர்பாக எந்த விதமான ஒத்துழைப்பினையும் தாம் வழங்கப்போவதில்லை என துணைவேந்தருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் ஊழியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-ரி)

## நில அளவையாளர்களின் வேலை நிறுத்தம் முடிவு

கொழும்பு,மார்ச்4

அரசாங்க நில அளவைத் திணைக்கள ஊழியர்கள் கடந்த வியாழக்கிழமை முதல் மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தம் நேற்றுப் பிற்பகல் கைவிடப்பட்டது.

காணியமைச்சின் செயலாளர் டபிள்யூ. கே.கே. குமாரசிறி தலைமையில் அமைச்சில் நேற்று நடைபெற்ற பேச்சுகளில் நில அளவையாளர் சங்கத்தின் மூன்று முக்கிய கோரிக்கைகளுக்குத் தீர்வுகாண இணக்கம் காணப்பட்டது. இதையடுத்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. (ம)

## பல்லேகல ஆடைத் தொழிற்சாலையில் 13 யுவதிகள் கருங்கற்கள் தாக்கி காயம்!

கொழும்பு,மார்ச்4

கண்டி, பல்லேகலையில் நிறுவப்பட்டு வரும் பௌத்த மத்திய நிலையத்தின் கட்டுநிர்மாண வேலைத் தளத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற வெடி விபத்தொன்றின் காரணமாக 13 யுவதிகள் காயமடைந்தனர்.

அந்த நிலையத்தின் அருகில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்துவந்த யுவதிகளே காயமடைந்தவர்களாவர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மத்திய மாகாண சபை அலுவலகத்துக்கு எதிரே உள்ள அந்த பௌத்த மத்திய நிலையத்தில், வேலைத்தளத்தில் நேற்று முற்பகல் கற்பாறை ஒன்று வெடிக்கவைக்கப்பட்டுள்ளது. கருங்கல் துண்டுகள் சிதறி அருகில் உள்ள ஆடைத்தொழிற்சாலையை தாக்கியதாலேயே 13 யுவதிகளும் காயமடைந்தனர். (ம)

## உலக வங்கிக்குழு இன்று வருகின்றது

யாழ்ப்பாணம்,மார்ச்4

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்று இன்றுகாலை யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளது.

இக்குழு காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதுடன் குடாநாட்டின் பல்வேறு இடங்களையும் பார்வையிடவுள்ளது. (ம-10)

## கட்சியிலுள்ள புதியமுகங்கள் தாக்கினாலும் அசையமாட்டேன்

### கண்டியில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்விகளுக்குப் பதில்

கொழும்பு,மார்ச்4

சுதந்திரக் கட்சியில் அண்மையில் இணைந்து கொண்ட சிலர் என்னைத் தாக்குகிறார்கள். ஆனால், அவற்றினால் அசையாது சேவையாற்றுவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கண்டியில் நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்

ஸ்ரீ தலதா மாளிகையில் வழிபடச் சென்ற அவரை நிருபர்கள் சந்தித்து கேள்விகளை எழுப்பினர்.

கட்சிக்குள் எனக்கு எதிரான நெருக்கடிகள் பழக்கமானவையே. இவ்வாறான சவால்களைக் கண்டு நான் அஞ்சவில்லை.

சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான புரிந்துணர்வு பற்றிய பேச்சுகள் திருப்திகரமாக நடைபெறுகின்றன. கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இப்பேச்சுகளின் பெறுபேறுகள் சமர்ப்பிக்கப்பட்டு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு அவர் கேள்விகளுக்குப் பதிலளித்துக்கூறினார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் சுதந்திரக் கட்சி எம்.பிக்களின் இரண்டு நாள் பாசறை கண்டியில் நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவரும் அதில் கலந்துகொண்டார். (ம)

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1ஈ, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

ரூ. 16910 தல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி விதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

# இலங்கையின் கோரிக்கை நிராகரிப்பு!

தென்னாபிரிக்காவிடம் தாம் தோல்வியுற்றாலும் நியூஸிலாந்து அணியுடனான போட்டியில் வெற்றி பெற்றமையால் தமக்கு 'சுப்பர் சிக்ஸ்' வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என இலங்கை அணி ஐ.சி.சியிடம் கோரியிருந்தது.

இக்கோரிக்கையை உலகக் கிண்ண போட்டிகளுக்கான தொழில் நுட்ப குழு நிராகரித்துள்ளது.

இச்சுற்றுப்போட்டி விதிகளின்படி ஆகக்கூடுதலான புள்ளிகளை பெற்ற முதல் 3அணிகள் சுப்பர் சிக்ஸுக்குத் தெரிவாகும்.

இரு அணிகள் சம புள்ளிகளுடன் இருந்தால் அவ்வணிகளுக்கிடையிலான போட்டியில் வென்ற அணிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இரண்டுக்கு மேற்பட்ட அணிகள் சம புள்ளிகளுடன் இருந்தால் இவ்வணிகளுக்கிடையிலான போட்டிகளில் கூடுதலான வெற்றிகளைப் பெற்ற அணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அதுவும் சமனாக இருந்தால் ஓட்ட வீதம் கருத்தில் கொள்ளப்படும்.

ஓட்ட வீதம் சமனாக இருந்தால் ஒவ்வொரு அணியும் வீசிய பந்துகளுக்கு பெற்ற விக்கெட்டுக்களின் எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்படும்.

அப்போதும் அணிகள் சமநிலையில் இருந்தால் இறுதியாக குலுக்கல் முறையில் சுப்பர்சிக்ஸுக்கு அணிகள் தெரிவாகும்.

இந்நிலையில், கடந்த வெள்ளியன்று காலை (இலங்கை - மேற்கிந்திய போட்டிக்கு முன்னர்) ஐ.சி.சி. தொழில்நுட்பக் குழுவிடம் இருந்து அணிகளின் நிர்வாகிகளுக்கு அறிக்கை யொன்று அனுப்பப்பட்டது.

"இரண்டுக்கு மேற்பட்ட அணிகள் சமபுள்ளிகளையும் சமனான எண்ணிக்கையிலான வெற்றிகளையும் பெற்றிருந்தால் குறித்த அணிகளுக்கிடையிலான போட்டிகளில் கூடுதலான வெற்றிகளை பெற்ற அணி அல்லது அணிகள் தெரிவுப்பட்டியலில் உயர்ந்த இடங்களைப்பெறும்.

இவ்விதி அமுல்படுத்தப்பட்டு மேலும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அணிகள் தெரிவு செய்யப்படவேண்டியிருந்தால் ஓட்ட வீதத்திற்கே முன்னுரிமை வழங்கப்படும். அதுவும் சமநிலையில் இருந்தால் பந்துவீச்சு விக்கெட் வீதம் கருத்தில் கொள்ளப்படும்"

இவ்வாறு மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வரை குழு 'பி' இல் இலங்கை, கென்யா ஆகியன 16 புள்ளிகளைப் பெற்றிருந்தன. நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய அணிகளுக்கும் தலா 16 புள்ளிகளைப் பெறும் வாய்ப்பு உள்ளது.

இவற்றில் கென்ய அணி இலங்கை, நியூஸிலாந்து ஆகியவற்றுடனான போட்டிகளில் வெற்றிப்புள்ளிகளைப பெற்றதால் சுப்பர்சிக்ஸுக்கு தெரிவாகிவிட்டது. தென்னாபிரிக்க அணி இலங்கையை வென்றால் இலங்கையையும், கென்யாவையும் வென்றதன் அடிப்படையில் சுப்பர்சிக்ஸுக்கு தெரிவாகும்.

மூன்றாவது இடத்துக்கு இலங்கை, நியூஸிலாந்து ஆகியனவற்றில் ஓட்ட வீதத்தில் முதலிடம் பெறும் அணியே தெரிவு செய்யப்படும். முன்னணியில் இருந்தது எனினும் கனடாவுடனான போட்டியின் மூலம் நியூஸிலாந்தின் ஓட்டவீதம் வெகுவாக அதிகரிக்கும் சாத்தியம் இருந்தது.

இந்நிலையில், தொழில்நுட்பக் குழுவின் அறிவித்தல் போட்டிகளுக்கான மூல விதிகளுக்கு முரணாக உள்ளதாக இலங்கை அணி தெரிவித்தது. ஓட்ட வீத அடிப்படையில் அல்லாமல் நியூஸிலாந்தை தாம் வென்றதன் அடிப்படையில் தமக்கு சுப்பர்சிக்ஸ் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என இலங்கை ஞாயிறன்று கோரியிருந்தது.

சுற்றுப் போட்டிகளுக்கான தொழில் நுட்பக்குழு இக்கோரிக்கையை நிராகரித்தது. எனினும், மேன்முறையீடு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதன்படி மேன்முறையீட்டு விசாரணைகளுக்குப் பொறுப்பான முன்னாள் ஸிம்பாப்வேயின் உயர் நீதிமன்ற நீதிபதி அஹமட் இப்பிராஹிமிடம் இலங்கை முறையீடு செய்தது.

இத்தீர்ப்பு இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 2 மணிக்கு அறிவிக்கப்பட்டது. எனினும், தொழில் நுட்பக்குழுவின் தீர்ப்பை உறுதி செய்து நீதிபதி இப்பிராஹிமிடம் தீர்ப்பளித்தார்.

இதனால் இலங்கை அணி தென்னாபிரிக்காவை வென்றால் அல்லது நியூஸிலாந்தை விட ஓட்ட வீதத்தில் முன்னணியில் இருந்தால் மட்டுமே சுப்பர்சிக்ஸுக்கு தகுதி பெறமுடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. (ம-10)

# அணியின் வெற்றியே முக்கியம் சதம் பற்றிக் கவலையில்லை

## டெண்டுல்கர் தெரிவிப்பு

செஞ்சூரியன்,மார்ச்4

பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களை தவிடுபொடியாக்கி, இந்திய அணியை வெற்றி பெறச்செய்த அதிரடி நாயகன் டெண்டுல்கர் பாகிஸ்தானுடனான ஆட்டத்தில் 98 ஓட்டங்களைக் குவிததார். ஆட்டம் முடிந்த பிறகு டெண்டுல்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

நான் இப்போது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது. மிகவும் சந்தோஷமாக இருக்கின்றேன். நான் சதம் அடிக்காததால் ஏமாற்றம் அடையவில்லை. அதைப்பற்றி கவலைப்படவும் இல்லை.

எனக்கு என் சொந்த சாதனை ஒரு பொருட்டல்ல, இந்திய அணி வெற்றி பெற வேண்டும் என்பதுதான எனக்கு முக்கியமாகத் தோன்றும்.

பாகிஸ்தானுடனான போட்டிக்கு நான் பிரத்தியேகமாக எந்த ஒரு திட்டத்தையும் வகுக்கவில்லை. எப்போதும் போல்தான் களம் இறங்கினேன். வஸீம் அக்ரம் வீசிய பந்தை கவர் திசையை நோக்கி பவுண்டரி அடித்தவுடன் இன்று என்னுடைய நாள் என்று நான் உணர்ந்து கொண்டேன். அதன் பிறகு எல்லாம் சாதகமாக அமைந்தது.

இந்தியாவின் எல்லா ரசிகர்களும் ஆட்டத்தை ரசித்திருப்பார்கள்.

என் மனைவி எனக்கு போன் செய்து இங்கு எல்லாரும் வெடி கொளுத்தி கோலாகலமாக வெற்றியைக் கொண்டாடுவதாகச் சொன்னார். அதைக் கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டேன். நாங்கள் தோல்வியடைந்திருந்தால் நிலைமை வேறு விதமாக மாறியிருக்கும். என்னுடைய இன்னிங்சை நினைத்து சந்தோஷப் பட்டிருக்க முடியாது.

- இவ்வாறு டெண்டுல்கர் கூறினார்.

டெண்டுல்கரையும் டிராவிட்டையும் வீழ்த்துவேன் என்று அக்தர் சவால்



விட்டார். சொன்னமாதிரி உங்கள் விக்கெட்டை பறித்துக் கொண்டாரே என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு டெண்டுல்கர் சிரித்துக் கொண்டே நான் தசைப்பிடிப்பால் வலி தாங்க முடியாமல் ஆட்டத்தை நிறுத திக்கொண்டு வெளியே செல்லலாமா என்று இருந்தேன். அந்த நேரத்தில் எதிர்பாராத விதமாக அக்தர் பந்தில் அவுட் ஆகிவிட்டேன். துரதிஷ்டம் எப்படி வருகிறது பார்தீர்களா? என்றார்.

# மோசமான பந்துவீச்சே தோல்விக்கு காரணம்

## வக்கார் கூறுகிறார்

செஞ்சூரியன்,மார்ச்4

பாகிஸ்தான் அணியின் தோல்வி குறித்து வக்கார் யூனிஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

எங்களது பந்துவீச்சு மோசமாக இருந்தது. குறிப்பிட்டு யாரையும் சொல்ல முடியாத படி அனைவரதும் பந்து வீச்சும் மோசம் தான். முதலில துடுப்பாடி 273 ஓட்டங்கள் எடுத்தோம். இது நல்ல இலக்குதான் ஆனால் களத்தடுப்பில் நாங்கள் சொதப்பி விட்டோம்.

எங்கள் பந்து வீச்சாளர்கள் வேகம ஒன்றே குறியாக இருந்து விட்டனர். நேர்த்தியான முறையில் பந்து வீசத் தவறிவிட்டனர். இது தான் தோல்விக்கு காரணம்.

டெண்டுல்கர் மிகவும் சிறப்பாக விளையாடினார். அவருக்கு எதிராக இரண்டு புறமும் இருந்து பந்து வீச்சை மாற்றிப் பார்த்தும் எடுபடவில்லை.

டெண்டுல்கர் அவுட் ஆனாவுடன் எங்களுக்கு ஒரு நம்பிக்கை வந்தது. ஆனால், டிராவிட் வழக்கம் போல் அவரது பாணியில் தூண்போல் நின்று

(13ஆம் பக்கம் பார்க்க)

# அன்வரின் சதம் மகளுக்கு சமர்ப்பணம்

பாகிஸ்தான் வீரர் சயீட் அன்வர் இந்திய அணியுடனான உலகக்கிண்ணப் போட்டியில் தாம்பெற்ற சதத்தை காலஞ்சென்ற தனது மகளுக்கு சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

இதேவேளை, இப்போட்டியில் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் தாம் பெற்ற 98 ஓட்டங்களை தனது மூத்த சகோதரர் அஜித் டெண்டுல்கருக்கு சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

சயீட் அன்வரின் மகள் பிஸ்மாஸ் 2001ஆம் ஆண்டு ஓகஸ்ட்டில் கடும் சுகயீனம் காரணமாக காலமானார், அப்போது அவருக்கு வயது 4 மட்டுமே.

தனது மகளின் மரணத்தையடுத்து சயீட் அன்வர் இஸ்லாமிய மார்க்கப் பற்றாளராக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

"கடந்த வருடம் இடம்பெற்ற தென்னாபிரிக்கச் சுற்றுலாவிலிருந்து விலக்கப்பட்டபின் ஓய்வுபெற்றுவிடத் தீர்மானித்திருந்தேன்.

"எனினும், உலகக்கிண்ண போட்டியில் நான் விளையாட வேண்டுமென நண்பர்களும் உறவினர்களும் வற்புறுத்தினர். அதனால் நான் இப் போட்டிகளில் பங்குபற்றுகிறேன்."




இவ்வாறு சயீட் அன்வர் கூறினார்.

34 வயதான அன்வர் ஒருநாள் போட்டியொன்றில் 194 ஓட்டங்களை பெற்று உலக சாதனையாளராக

(13ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அணி சம்பியனாகும்: அர்ஜுன, இம்ரான் கூறுகின்றனர்

இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்லும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இவ்வாறு இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க, பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான்கான் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இம்ரான்கான் 1992 இல் உலகக் கிண்ணத்தை வென்ற பாக்.அணிக்கும், அர்ஜுன 1996 இல் உலக சம்பினாகிய இலங்கை அணிக்கும் தலைமை தாங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

"பாகிஸ்தான் அணிக்கெதிராக இந்தியா பெற்ற 6 விக்கெட் வெற்றி இந்திய அணியின் நம்பிக்கையை வெகுவாக உயர்த்தியுள்ளது.

அவர்கள் மிகச் சிறப்பான நிலையில் உள்ளனர். இச்சுற்றுப் போட்டியில் மிக நீண்ட தூரம் செல்லக்கூடியவர்கள்."

இவ்வாறு அர்ஜுன கூறினார்.

39 வயதான அர்ஜுன, கங்குலியின் தலைமைத்துவத்தையும் பாராட்டினார்.

(13ஆம் பக்கம் பார்க்க)

SHARP Action of the day



நேற்று சதம் அடித்த அத்தப்பத்துவின் விளாசல்

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ்
BROWNS ELECTORINICS
Browns

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2225150
Browns ELECTRONICS

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

# கடித்த பாம்பை கொன்ற நபர்

தனக்குக் கடித்த பாம்பினை கடியுண்ட நபரே அடித்துக் கொன்ற சம்பவம் அண்மையில் மந்துவில் கிழக்கில் இடம்பெற்றது.

குழை வெட்டுவதற்காக அப்பகுதி காட்டுக்குச் சென்ற வேளையில் பற்றை மறைவிலிருந்து பாம்பு இந்த நபரைக் கடித்ததாகவும் -

பாம்பு கடித்த இடத்தினை அந் நபர் கத்தியால் வெட்டி விஷம் கலந்த இரத்தத்தை வெளியேற்றி விட்டு பாம்மை அடித்துக் கொன்றதாகவும்-

பின்னர் அடையாளத்துக்காக பாம்பின் தோலை உரித்து எடுத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

04-03-2003




### செல்வன் ப.தீர்கரன்

யாழ்.அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த
**திரு.திருமதி பரமலிங்கம் - வாணி**
தம்பதிகளின் அருந்தவப் புதல்வன்

**தீர்கரன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (04.03.2003) செவ்வாய்க்கிழமை அராலியில் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை சவூதியில் இருக்கும் அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, சிங்கப்பூரிலிருக்கும் ரவி மாமா, மாமி, மச்சி அபிஷானி, ஏரம்புப் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார்களான அனுஷியா, ஜந்திரி, கோபிதா, அண்ணா திருபன், பாலு சித்தா (இந்தியா), நகுலச் சித்தா (சுவிஸ்), இரத்தினசிங்கம் பெரியமாமா, பெரியமாமி, அத்தான்மார்களான கேதரன், தவராஜ், குமரன், ஸ்கந்தா மாமா, மாமி, மச்சிகளான பவானி, தர்மிகா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் அராலி பிள்ளையார், அம்மன் அருள் பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(15067)

தகவல்: இ.பாலசூரியன் (தாத்தா).

# நஷ்டஈட்டுக் கொடுப்பனவு குறித்து ஓய்வூதியர்கள் வேண்டுகோள்.

வலி.மேற்கு, மார்ச் 4

யாழ்.மாவட்டத்திலுள்ள ஓய்வூதியம் பெறுபவர்கள் தமது சொத்து இழப்பீட்டுக்கான நஷ்டஈட்டை முழுமையாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாத வருமானம் ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேற்பட்ட குடும்பங்களின் குறிப்பாக ஓய்வூதியம் பெறுபவர்களின் சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு தற்போது வீடமைப்பு, கட்டடத்திணைக்கள அதிகாரிகள் சிபார்சு செய்த தொகையின் இருபது வீதமே வழங்கப்படுகின்றது. வடக்கின் மீள்குடியமர்வு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் ஏற்கனவே விநியோகிக்கப்பட்ட சுற்று நிருபத்துக்கமையவே இக்கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

ரூபா ஆயிரத்து 500 இற்குட்பட்ட வருமானத்தையுடைய குடும்பங்களின் சேதமடைந்த வீடுகளுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு 75 வீதம் ரூபாவாக அதிகரிக்கப்பட்ட நிலையில் ஓய்வூதியம் பெறுபவர்கள் தமது கொடுப்பனவையும் அதிகரிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(ஒ-175)

## தூக்குமரக் கயிறுகளுக்கு 2 லட்சம் ரூபா!

கொழும்பு,மார்ச்4

மீண்டும் மரண தண்டனையைக் கொண்டுவந்தால், தூக்கு மரத்துக்கு தேவையான விசேட கயிறு கொண்டு வருவதற்கான கேள்விப் பத்திரம் கோரப்பட்டிருக்கிறது. இரண்டு தூக்குக் கயிறுகளைக் கொண்டுவர சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்படுகின்றது.

மரணதண்டனை மீண்டும் கொண்டுவரப்பட வேண்டுமென பெரும்பாலானோர் விரும்புகின்றனர். இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறுகின்றார்.

எவ்வாறாயினும் மரணதண்டனை தொடர்பான இறுதித் தீர்மானம் ஜனாதிபதியின் கைகளிலேயே உள்ளது. (ஐ)

## படையினரிடம் 67 வீடுகள்

கொழும்புத்துறை கிழக்கில் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் 67 வீடுகள் படையினர் வசம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலமுறை கோரிக்கை விடுத்தும் தாம்குடியமர அனுமதிக்கப்படவில்லை என அம்மக்கள் தெரிவித்தனர்.(ஒ-30)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



### திருமதி அன்னலட்சுமி கார்த்திகேசு

(மணி அக்கா)

மண்ணில் 26-12-1923 — விண்ணில் 02-02-2003

**அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.**

இன்று (04.03.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.400, கோயில் வீதி,*
*முடமாவடி, நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(15113)

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


04-03-2003 இதழில்




சுடர் ஒளி

அதிகாரிகளின் கோரிக்கைகளை அரசு புறக்கணிப்பு சீரழிந்து போகிறது வடபகுதி போக்குவரத்துச் சேவை

அமைச்சர்களின் வாக்குறுதிகள் குறையவில்லை வடகிழக்கு மக்களின் அவலநிலை மாறவில்லை

திருமலையைத் தனிமைப்படுத்த திரைமறைவில் திட்டங்கள்

நகரின் மத்தியில் வீட்டுக்குள் நவீன ஆயுதங்கள் எப்படி?

நாட்டு மக்களை முட்டாளாக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்துக்குத் தடை

எச்சங்களே மிச்சங்களான வட - கிழக்கு நிலங்கள்

இனவாதக்கட்சிகளின் இரட்டை வேட நாடகம்

சமஷ்டித் தீர்வின் கீழான நிதி அதிகாரங்கள் என்ன?

வறுமை ஒழிப்புக்கு ஒரு புதுமைத்திட்டம்

விலை 14/=

உதயன்

## தமிழர் -முஸ்லிம்கள் உறவு

அரசு-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஓராண்டு பூர்த்தியை ஒட்டி கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் நடத்திய கருத்தரங்கில் மட்டக்களப்பு, அம்பாறை சிறப்புத் தளபதி ரீ.ரமேஷ் உரையாற்றினார். அப்போது அதிர்ச்சி தரும் ஒரு தகவலை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

*"சுயநலம் கொண்ட சில அரசியல்வாதிகளின் முயற்சியால் முஸ்லிம் இளைஞர்கள் சிலருக்கு ஆயுதப்பயிற்சி வழங்கப்படுவதாக அறிகிறோம். பல போர் முனைகளைக் கண்டு சிங்களப்படைகளை வெற்றி கொண்டவர்கள் புலிகள். அவர்களோடு முஸ்லிம் இளைஞர்களை மோதவைத்து அவர்களைப் பலிக்கடாவாக்க வேண்டாம்."* - இவ்வாறு எச்சரிக்கையோடு கூடிய தகவலை வெளியிட்டிருக்கிறார் தளபதி ரமேஷ்.

அவர் கூறிய பல கருத்துக்கள் சிந்திக்கத்தக்கவை. தற்போதைய இன மோதல் - இன முறுகல் நிலையில் அவை அனைவராலும் கருத்தில் எடுக்கப்பட வேண்டியவை.

*சிறுபான்மை இனமான தமிழர்கள் அடக்கப்பட்ட இனமாகப் பல்வேறு துன்ப துயரங்களை அனுபவித்துள்ளனர். எனவே, மற்றொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களை தமிழினம் அடக்கப் போவதில்லை; அடக்க விரும்பாது.*

*தமிழ்பேசும் மக்களின் தாயக விடுதலைப் போராட்டத்துக்கு முஸ்லிம் மக்கள் அளித்த பங்களிப்பு அளப்பரியது.*

*தமிழர்-முஸ்லிம்களிடையே குரோதத்தை வளர்ப்பதன் மூலம் தமிழ் பேசும் சமூகத்தின் விடுதலை வேட்கையை முறியடிக்க சிங்கள பேரினவாதம் திட்டமிடுகின்றது. அந்தத் திட்டத்துக்கு முஸ்லிம்கள் பகடைக்காய்களாகி பலியாகிவிடக்கூடாது.*

*தமிழர்-முஸ்லிம் நல்லுறவைக் குலைக்கும் - முயற்சியில் சிங்களப் பேரினவாத சக்திகள் ஈடுபட்டு வெற்றியும் கண்டுள்ளன. திட்டமிட்ட நடவடிக்கை மூலம் இரு சமூகங்களுக்கும் இடையில் பகைமையைத் தோற்றுவித்து அதனைத் தமிழ் - முஸ்லிம் கலவரம் என்று வர்ணித்து குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன.*

- இப்படிச் சுட்டிக்காட்டியிருக்கிறார் தளபதி ரமேஷ்.

தமிழ் பேசும் மக்களின் நியாயமான அபிலாஷைகளைத் தீர்த்து வைக்க முடியாத பேரினவாத சக்திகள் அவர்களைப் பிரித்தாளுகின்ற தந்திரத்தை முடுக்கிவிட்டன.

அதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு காய்களை வீழ்த்தும் திட்டத்தில் அவை ஈடுபட்டன.

ஒன்று - தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் ஒரே பிரிவினராக குரல் எழுப்பி வந்தவர்களை தமிழர்கள், முஸ்லிம்கள் என இரு பிரிவினராக்கி அவர்களது வலிமையைத் துண்டாக்கியது.

மற்றது - அந்த இரு பிரிவினருக்கும் இடையிலேயே மோதலை ஏற்படுத்தி இரு தரப்பையுமே நலிவடையச் செய்ய முயன்றது.

இந்த இரண்டு முயற்சிகளிலும் பேரினவாத சக்திகள் தற்காலிக வெற்றியைப் பெற்றிருக்கலாம். ஆனால், தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களது அரசியல் நிலைமைகளை மீண்டும் சீர்தூக்கிப் பார்த்து - மீளாய்வு செய்து - தம்மை அரசியல் ரீதியாக அணிதிரட்டி ஒன்றுபட்டு செயற்படக்கூடிய வாய்ப்பான அரசியல் நிலைமை தற்போது மீண்டும் தோன்றியுள்ளது.

தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டு செயற்பட்டால் தங்களது அரசியல் பதவிகளுக்கு ஆபத்து வரும் என்று கருதுகின்ற தலைவர்கள் சிலர் இத்தகைய ஒற்றுமையை விரும்பமாட்டார்கள் என்பதும் கண்கூடு.

முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதங்கள், ஆயுதப் பயிற்சிகள் வழங்குவதன் மூலம் தமிழர் - முஸ்லிம்கள் நல்லுறவை சீர்குலைக்கலாம் என்ற திட்டத்தை தமது பதவிக் கதிரைகளைக் காப்பாற்றிக் கொள்ள முயலும் சில தலைவர்கள், மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ ஆதரிக்கக்கூடும்.

ஆனால், அத்தகைய செயற்பாடு நாட்டில் - குறிப்பாகக் கிழக்கிலங்கையில் - பேரழிவுக்கே வழிவகுக்கும்; போராட்ட சக்திகளை நலிவுபடுத்தி, அடக்க முயலும் பேரினவாத சக்திகளுக்கு தெம்பூட்டும்.

தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டு, தங்களுக்கு எதிரான பொது எதிர்ப்பு சக்தியுடன் போராடி, உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய காலகட்டம் இது. தமிழர் - முஸ்லிம்கள் நல்லுறவு என்பது இருதரப்பினரையும் பொறுத்தவரை இப்போது வரலாற்றுக் கட்டாயம்; கடமை.

வெளிசக்திகளின் - அல்லது பிழையான தலைவர்களின் - தவறான வழிகாட்டல்களுக்கு இடம் கொடுத்து பாதை தப்பிச் செல்வது மீள முடியாத வரலாற்றுத் தவறுக்கு இட்டுச்சென்றுவிடும் என்பதை சம்பந்தப்பட்டோர் உணர்ந்து கொள்வது நல்லது.

# அனுமதி பெறாது கட்டடங்களை கட்டுவோர் மீது நடவடிக்கை

### பிரதேச சபை செயலாளர் எச்சரிக்கை

நல்லூர் பிரதேசத்தில் உரிய அனுமதி பெறாது கட்டடங்களைக் கட்டுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எச்சரித்துள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி பிரதேச சபையின் உரிய அங்கீகாரம் பெறாது கட்டடங்கள் அமைத்து வரப்படுகின்றன. இதுபற்றி முன்னர் அறிவித்திருந்தும் முன் அனுமதி பெறாது கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதால் போக்குவரத்து, சுகாதாரம், சூழல் போன்றவற்றின் பாதுகாப்புக்கு இடைஞ்சல் ஏற்படுகின்றது.

எனவே, சகல தரப்பினரும் பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின்படி உரிய அனுமதி பெற்று கட்டடங்கள் கட்ட ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அனுமதி பெறாது கட்டடங்களை கட்ட முற்படுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றுள்ளது.

## திருவீதி மான்மியம்

தம்பையர் மர மஞ்சள் வாங்கி
தனித்ததை இடித்து காய்ச்சி
தாம்போகும் மினி பஸ்ஸில் நாளும்
தவறாது எடுத்துச் செல்வார்
செம்மையாக மினி பஸ் மோதில்
சிறப்பாக அதனை மொண்டால்
கம்பி குத்தி வரும் ஏற்பை
கடிதினில் போக்கு வாராம்
இம்மண்ணில் இவரைப் போல
எல்லோரும் செய்வாராகில்
செம்மையாய் ஏற்பு இன்றி
செகத்தினில் வாழலாமே!

- **விகடகவி.**



கிழங்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் நடத்திய புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஓராண்டு பூர்த்தி நாள் கருத்தரங்கு சமீபத்தில் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், மருத்துவப் பொறுப்பாளர் வாமனன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல்நாதன், மட்டக்களப்பு நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் சேனாதிராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி ரமேஷ் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# சமதர்ம நிர்வாகம் தோன்றும் போதே எமக்கு இயல்பான வாழ்வு கிடைக்கும்!

### உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

எமது தாயகத்தில் சமதர்ம நிர்வாகம் தோன்றும் பொழுதே இயல்பான வாழ்வுநிலை தோன்றும். அதுவரைக்கும் நாங்கள் எமது போராட்டத்தை ஏதோ ஒரு வடிவத்தில் முன்னெடுத்தே ஆக வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமராட்சிக் கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளரும் வடமராட்சி வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவருமான சத்தியசீலன்.

மக்களின் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படாததைக் கண்டித்து நல்லூரின் வடக்கு வீதியில் அண்மையில் இடம்பெற்ற உண்ணா நோன்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய பொழுது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆயுதபலத்தால்தான் புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாகியது. சமாதான காலத்திலும் ஆயுத சமபலம் தொடர்ந்து பேணப்பட வேண்டும். அதற்கான தலைமை எமக்குச் சரியாக அமைந்துள்ளது.

தலைவர் பிரபாகரன் காலத்தில் சமதர்ம நிர்வாகம் மலரும் பொழுது தான் எமது மண்ணில் இயல்புநிலை ஏற்படும். அதுவரைக்கும் நாங்கள் எமது போராட்டத்தை நடத்தியாக வேண்டும். எமது போராட்டத்தை எதிர்க்கும் ஒரு கூட்டம் எம்மிடையே எப்பொழுதும் இருக்கத்தான் செய்யும்.

எமது கல்வி அழிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய நிலையில் உள்ள எமது கல்வியை மேம்படுத்த பொதுமக்கள் மட்டுமன்றி புத்திஜீவிகளும் தம்மை அழித்தாவது போராட்டத்தைத் தொடர வேண்டும்.

தேசத்தின் கட்டுமாணப் பணியில் அனைவரும் தம்மாலான பங்களிப்பை வழங்க வேண்டும்.

தமிழர் வாழ்வில் இயல்பு நிலையை தோற்றுவிக்க - ஒரு வருடம் கடந்த பின்பும் - புரிந்துணர்வு ஒப்பந்தம் தவறிவிட்டது. நாகர்கோவில், எழுதுமட்டுவாள் போன்ற பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை; பாடசாலைகள் திறக்கப்படவில்லை; முன்பள்ளிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

பொலிகண்டியில் கந்தவனக் கடவை ஆலயத்திற்கு முன்பாக உள்ள காணியில் இராணுவம் நிலை கொண்டு இருப்பதால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சியை வழங்க இயலாதுள்ளது.

குடியேற்றத்திட்டங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அங்கு இருந்தவர்களின் காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படாததால் நஷ்டஈட்டைக்கூட இவர்களால் பெற முடியவில்லை. இது இயல்பு நிலையா?

நாங்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப தளம்பக்கூடாது. இதுபோன்ற நிகழ்வுகளில் பங்குபற்றுவதன்மூலம் அரசாங்கத்திற்கும் வெளிநாடுகளுக்கும் எமது அவலத்தைத் தெரியப்படுத்த வேண்டும் - என்றார் அவர்.

சமாதான நீதிவான் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அதன் அங்கத்தவர்களும் வெகுசன அமைப்புப் பிரதிநிதிகளும் உரையாற்றினர். (ஒ-88)

# அபிவிருத்திக் குழுக்கூட்டம் யாழ்.செயலகத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்4

யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுவின் கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 10மணிக்கு குழுவின் இணைத்தலைவர்களான இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் தலைமையில் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் யாழ்.மாவட்ட அரசஅதிபர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அன்றையதினம் பிற்பகல் 2மணிக்கு மாவட்ட இணைப்புக் குழுவின் கூட்டமும் யாழ்.செயலகத்தில் இணைத் தலைவர்களான அமைச்சர் தி.மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-10)

# குழி வெட்டியபோது சிக்கிய கிரனேட் பொதி!

வலி.மேற்கு,மார்ச்4

சித்தன்கேணியில் முன்னர் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த இடத்தில் மலசலகூடத்துக்குக் குழிவெட்டும போது ஒன்பது கிரனேட் குண்டுகள் பொலித்தீன் பைக்குள் பொதி செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காணியின் உரிமையாளரும் இப்பகுதி கிராம அலுவலரும் வட்டுக்கோட்டையிலுள்ள பொலீஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு இதனைத் தெரிவித்துள்ளனர்.

இதே இடத்திற்கு சமீபமாக ஒரு வீட்டில் மணலுக்குள் புதைக்கப்பட்டிருந்த 'ஷெல்' ஒன்றை பொலீஸார் சில மாதங்களுக்கு முன் மீட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-175)

### நாளை

மாசி 21
புதன்கிழமை
(05.03.2003)
திதி : துதியை
முற்பகல் 11.27 வரை.
நட்சத்திரம்: உத்திரட்டாதி
பிற்பகல் 3.58 வரை.
சுபநேரம் : 4.56 - 6.26
ராகுகாலம்: 12.26 - 1.56
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

ஒரு விஷயத்தை எவ்வாறு செய்வதென்பதை அறிவது எளிது; அதனைச் செய்வது தான் கடிது.

### வல்வினை போக்கிடும் வைத்தீஸ்வரா சரணம்

*சங்கரா சம்போ கெங்காதரனே சரணம்*
*எங்களின் துயர் தீர்க்கும் ஈஸ்வரனே சரணம்*
*மங்கள வாழ்வருளும் மகேஸ்வரனே சரணம்*
*அடியாருளமுறையும் அம்பலவா சரணம்*
*திங்களணி சேகரனே தில்லைக் கூத்தா சரணம்*
*வல்வினை போக்கிடும் வைத்தீஸ்வரா சரணம்*
*எங்கும் வியாபகமாய் இருப்பவனே சரணம்*
*எழிலாய் வலம் வரும் ஏந்தலே சரணம் சரணம்.*

- நயினை விஜயன்.

(வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய ஐந்தாம் திருவிழா இன்று)

# 33ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம்
26 - 04 - 1949



மறைவு
31 - 01 - 2003

## திருமதி சின்னத்துரை புவனேஸ்வரி
(செல்லமணி - சோதி)

அம்மா! அம்மா!! என்று கதறுகின்றோம் அம்மா!!!
உங்கள் செவிதனில் கேட்கவில்லையா அம்மா?
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் 'அம்மா' என்று நாம்
அழைக்க எம் அருகினில் நீங்கள் இல்லையே அம்மா!
பாசமுடன் எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்னையே!
பாச மழையில் எமை நனைய வைத்து பாதி வயதினிலே
எம்மையெல்லாம் பரிதவிக்கவிட்டு எங்குதான்
பறந்து சென்றீர்கள் அம்மா? ஆத்மா சாந்தி பெறட்டும்!

எமது குடும்பத் தலைவி இறைபதமடைந்த செய்தியை அறிந்து எம்மில்லம் நாடி ஓடோடி வந்து எங்கள் துயரத்தில் பங்கேற்று எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறி பலவகையிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் அவர் நோயுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றபோது அக்கறையோடு சேவைசெய்த வைத்திய அதிகாரிகள், தாதிமார் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (04-03-2003) செவ்வாய்க்கிழமை எமதில்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| நிரந்தர முகவரி: | தற்காலிக முகவரி: | மக்கள், மருமகன், |
|---|---|---|
| இன்னாவத்தை, | காலையடி, | சகோதரர்கள், |
| கொல்லங்கலட்டி. | பண்டத்தரிப்பு. (15103) | பேரப்பிள்ளைகள். |


PRINCE துருபிடிக்காத உலோக கிச்சன் சின்க்

பிரின்ஸ் நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.




ஏக விநியோகஸ்தர்கள்:
செண்ற் அந்தனீஸ் ஹாா்ட்வெயார் (பிறைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 337283-5, 436779 பெக்ஸ்: 446554
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 575666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



# எக்காளத் தொனி மாபெரும் எழுப்புதல் கூட்டங்கள்

இன்னும் இரு தினங்கள் மட்டும்

வெற்றி நிச்சயம் | விடுதலை சத்தியம்

✪ நோயினால் வருந்துபவர்களே! ✪ சமாதானம் இன்றி வாடுபவர்களே!
✪ பில்லி சூனியக் கட்டில் அகப்பட்டுள்ளவர்களே!

## குடும்பமாக வாருங்கள் இலவசமாக விடுதலை பெறுவீர்கள்.



பாஸ்டர் மேலின் குணசெல்வம்
ஸ்தாபகர் - நிர்வாகி,
எக்காளத் தொனி -
இலங்கை.



பாஸ்டர் ஸ்ரீபன் தங்கராஜா
ஜேர்மன்.



பாஸ்டர்
இயன் கிறிஸ்ரென்சன்
லண்டன்,
இங்கிலாந்து.

விசுவாசிகளுக்கான வேதப்படிப்பு
யாழ்.எக்காளத் தொனி சபையில் 28.02.2003 முதல் தினமும் காலை 9.30 மணி தொடக்கம்.

காலம் : 2003 பெப்ரவரி 28 முதல் மார்ச் 5ஆம் திகதி வரை.
நேரம் : தினமும் மாலை 4.30 மணி முதல் இரவு 8.00 மணிவரை.
இடம் : துரையப்பா விளையாட்டு அரங்கு, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: "எக்காளத் தொனி" 021-222-3632

(14968)

## நடந்துமுடிந்த கூட்டங்களில் நிகழ்ந்த அற்புதங்களில் ஒருசில....



நெஞ்சுவருத்தம், உடம்பு வலியினால் பல மாதங்களாகப் பீடிக்கப்பட்ட தாயார் ஜெபத்தின் போது சுகம் பெற்றார்.



கால்வலியினால் நடக்கமுடியாமல் அவஸ்தைப்பட்டவர் ஜெபத்தின் போது சுகம் பெற்றார்.



சத்திரசிகிச்சையின் பின்பும் வயிற்று வலியினால் அவஸ்தைப்பட்டவர் ஜெபத்தின் போது பூரண சுகம் பெற்றார்.



மூச்சுத்திணறலினால் பல மாதங்களாக கஷ்டப்பட்டவர் ஜெபத்தின் போது சுகம் பெற்றார்.

யாவரும் வாருங்கள்...... தெய்வ அருளால் விடுதலை பெறுவீர்கள்.

# உருளைக்கிழங்கு செய்கையாளருக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்

யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகளுக்கு பண வருவாயைத் தேடிக் கொடுக்கும் முக்கிய பயிர்களுள் உருளைக்கிழங்கும் ஒன்றாகும்.

வெங்காயம், மிளகாய், புகையிலை போன்ற பணப் பயிர்களுள் ஒன்றாகக் கருதப்பட்ட உருளைக் கிழங்கு தற்காலத்தில் சாதாரண ஒரு பயிராக உள்ளதோடு, போதிய வருமானததைத் தராமல் விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் பயிராகவும் மாறி வருகிறது.

பெருத்த எதிர்பார்ப்புடன் உருளைக கிழங்கு செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக - சில வருடங்களாக - ஏற்பட்டுவரும் நஷ்டத்தினால் அதனைக் கைவிடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுவதாகவும் தெரியவருகிறது.

உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்திற்குரிய நிவாரணங்களை விவசாயத் திணைக்களம் வழங்க முன்வராதிருப்பதும் விவசாயிகளின் வேதனைகளுக்கு பலம் சேர்ப்பதாகவும் அமைகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொடர்சசியாக சில வருடங்களில் உருளைக கிழங்கு செய்கை காலத்தில் ஏற்பட்ட காலநிலை மாற்றங்கள், திடீரெனப் பரவும் பல்வேறு வகை நோய்த் தாககங்கள் என்பவற்றால் பாதிப்படைந்து வநததுடன், செய்கையாளர்களுக்கு பெரும் நஷ்டத்தையும் விளைவித்து வருகின்றது.

பெப்ரவரி மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக்கிழங்கு அறுவடைக் காலமாகும். குடாநாட்டில் பெரும பாலும் வலிகாமம் கிழக்கு, வலிகாமம் தெற்குப் பிரதேசங்களில் உள்ள




நீர்வேலி, கோப்பாய், புத்தூர், நவக்கிரி, புன்னாலைக்கட்டுவன், ஏழாலை, குப்பிளான், ஈவினை, உரும்பிராய், உடுவில், இணுவில் போன்ற செம்மண் தரைகளில் இவை செய்கைபண்ணப படுகின்றன.

உருளைக்கிழங்கு செய்கையாளா களுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கு விவசாயத் திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம மூலமாகப் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. பயிருக்குத் தேவையான கிருமிநாசினிகள் மற்றும் பயிர்ச்செய்கை ஆலோசனைகள் என்பன கமநல சேவை நிலையப் பயிர்ச்செய்கை உததியோகத்தர்களால் வழங்கப்பட்டும் வருகின்றன.

இவ்வருடம் கமநல சேவைத் திணைக்களத்தால் விநியோகிக்கப் பட்ட விதை உருளைக்கிழங்குகள் நூற்றுக்கு நூறு நல்ல தரம் உள்ளவையாகவும் வீரியம் மிக்கவையாகவும காணப்பட்டதாக செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும், தரமான விதை கிழங்குகள் கிடைத்தபோதும் குடாநாட்டில் செய்கைக் காலத்தில் ஏற்பட்ட காலநிலை மாற்றங்களும், திடீர நோய்களும் உருளைக்கிழங்குச் செய கையைப் பாதிப்படையச் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உருளைக்கிழங்கு செய்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவரும் விவசாயியான தபத்திநாதர் பின்வருமாறு கூறுகிறார்:-

தரமான உருளைக்கிழங்கு விதைகள் உரிய காலத்தில் இம்முறை எமக்குக் கிடைத்தன. அவற்றை நடுகை செய்யும் காலத்தில் பெய்த கடும் மழை காரணமாக நிலத்தை போதியளவு பண்படுத்த முடியாதநிலை ஏற்பட்டது. அததுடன் பயிரில் திடீரென ஏற்பட்ட கொடி எரிதல் நோயினால் தரமான கிழங்கு விளையவில்லை. விரைவில் அவற்றை அறுவடை செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

உருளைக்கிழங்குச் செடிகளுக்கு பங்கசினால் ஏற்படும் எரிபந்த நோய், இலைக் கருகல் நோய் என்பவற்றை கட்டுப்படுத்தமுடியாமல் உள்ளது.

விவசாய திணைக்களம், கமத்தொழில் திணைக்களம் மற்றும் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் வழங்கும் ஆலோசனைகள், சிபார்சுகள் என்பவற்றுக்கமையவே பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றோம். நோய்களுக்கென சிபார்சு செய்யப்படும் மருந்து வகைகளை உரிய காலத்தில் பயன்படுத்துகிறோம். இருப்பினும், நோய்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாத நிலை ஏற்படுகிறது.

கிழங்கை நடுகை செய்து 75 நாள்களின் பின்னர் அறுவடை செய்தாலே நல்ல தரமான கிழங்குகளையும் அதிக விளைச்சலையும் பெற முடியும். இம்முறை திடீரென ஏற்பட்ட கொடி எரிதல் நோயினால் குறிப்பிட்ட காலத்துக்கு முன்பாக அறுவடை செய்ய நேரிட்டது. இதனால் எதிர்பார்த்த இலக்கை பெற முடியவில்லை.

சாதாரணமாக 50 கிலோ விதை உருளைகிழங்கின் மூலம் குறைந்த பட்சம் 250 கிலோ தொடக்கம் 350 - 400 கிலோ வரையான அறுவடையை எதிர்பார்க்கலாம். ஆனால், இம்முறை சுமார் 150 கிலோ வரையான உருளைக்கிழங்கையே எம்மால் பெறமுடிந்தது.

ஓர் ஏக்கர் நிலத்தில் உருளைக் கிழங்கைச் செய்கை பண்ண 18 ஆயிரம் ரூபா வரை செலவாகிறது.

**வி.பி.சர்மா**
**வலி.தெற்கு செய்தியாளர்**

ஒரு கிலோ உருளைக்கிழங்குக்கான உற்பத்திச் செலவாக 37 ரூபா ஏற்படுகின்றது. இன்று நாம் ஒரு கிலோ கிழங்கை 38 முதல் 40 ரூபாவுக்கே விற்கமுடிகின்றது. இதனால், எமக்கு இச்செய்கையால் இம்முறையும் நஷ்டமே ஏற்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கை வாங்கும் போது வியாபாரிகள் பத்துக்கிலோவுக்கு ஒரு கிலோ என்ற கணக்கில் கழிவு செய்கின்றனர். இக்கழிவுகள் மூலம் வியாபாரிகள் அதிக பணத்தை பெற்றுக்கொள்ள, பாடுபட்ட நாம் நஷ்டமடைய வேண்டியுள்ளது.

உள்ளூர் சந்தைகளில் கூட சநதைத் தரகர்கள் ஒவ்வொருவரும் தராசுக் கூலி எனக் கூறி எம்மிடம் பணத்தை வசூலித்துவிடுகின்றனர். இதுவும் எமக்குள்ள நஷ்டமாகும்.

எமது குறைபாடுகள் பற்றி நாம் பலமுறை உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் கூட அவர்கள் எவவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கடந்த 4,5 வருடங்களாக தொடர்ச்சியாக உருளைகிழங்குச் செய்கையில் நாம் நஷ்டமடைந்து வருகிறோம். எமது நஷ்டத்துக்குரிய மானியம் வழங்குமாறு பலமுறை திணைக்கள அதிகாரிகளிடம் கேட்டும் எமக்கு எந்தவித நிவாரணமும் கிடைக்கவில்லை.

இவ்வருடம் ஏற்பட்ட நஷ்டத்துக்கு என்றாலும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல், உருளைக்கிழங்குச் செய்கையை எதிர்காலத்தில் நாம் கைவிட வேண்டிய நிலை ஏற்படலாம் என அந்த விவசாயி கவலையுடன் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு உரிய முறையில் நிவாரணம் வழங்குவது கமத்தொழில் திணைக்களத்தின் முக்கிய கடமை. இல்லையேல், எதிர்காலத்தில் விவசாயிகள் உருளைக் கிழங்கு செய்கையை கைவிட நேரிடலாம். மீண்டும் நாம் உருளைக் கிழங்குக்காக தென்பகுதியிடம் கையேந்தும் நிலை ஏற்படுவதுடன் அதிக விலை கொடுத்தும் அவற்றை வாங்க வேண்டிய நிலையும ஏற்படும். ★

## மைற் நோயைக் கட்டுப்படுத்த உள்ளிக் கரைசலே சிறந்தது

### தென்னை அபிவிருத்தி அலுவலர் கூறுகிறார்

வட்டுக்கோட்டை,மார்ச்4

தென்னை மரங்களில் எல்லா பருவ நிலைகளிலும் காய்களைத் தாக்கி வரும் மைற்நோயைக் கட்டுப் படுத்த உள்ளிக்கரைசலைத் தெளித்தலே சிறந்தது.

- இவ்வாறு தெரிவித்தார் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். சத்தியேந்திரன்.

அண்மையில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக பிரதம எழுதுநர் திருமதி ஆசிவதட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

தேங்காய்களில் எல்லாப் பருவ நிலைகளிலும், முகிழ் பகுதியில் கரா வல் தன்மை வளர்ந்து விகாரமடைந்து பொச்சினை உரிக்க கடினமாக இருக்கும். அத்துடன் மட்டுமல்லாது சிறிய குரும்பட்டிகளாயின் முற்றவிடாது இளம் பருவத்திலே உதிர்ந்துவிடுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்த 20 கிராம் உள்ளியை 100 மில்லி லீற்றர் தண்ணீரில் நன்றாக அம்மி அல்லது கிறைண்டரில் அரைத்து துணியால் வடித்த கரைசலுடன் 5கிராம் சவற்காரத்தை 100 மில்லிலீற்றர் தண்ணீரில் கரைக்கவும் பின்னர் அந்தக் கரைசலினுள் வேப்பெண்ணையைச் சேர்க்கவும். ஒருபோத்தல் தண்ணீரில் கலக்கப்பட்ட இந்த கரைசலை தென்னை மரத்தில் ஏறி கைத்தெளி கருவியின் உதவியுடன் எல்லாப் பருவ நிலைகளிலும் உள்ள காய்களின் முகிழ் பகுதியில் படத்தக்கவாறு தெளித்துவிடின் மைற் நோயைக் கட்டுப்படுத்தமுடியும் - என்றார் அவர். (எ-ரி)

## 'மாவிலைத்தத்தி' பூச்சித்தாக்கத்தைத் தடுக்க தொல்புரத்தில் தெளிகருவி இலவசம்

மாமரங்களை பெரிதும் பாதித்து வரும் 'மாவிலைத்தத்தி' எனப்படும் பூச்சித்தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நிலத்திலிருந்து மருந்து விசிறக்கூடிய தெளிகருவி தொல்புரம் கமநலசேவை கேந்திர நிலையத்தில் உள்ளதாகவும் -

இதனை இப்பகுதி மக்கள் இலவசமாகப்பெற்று பயனடையுமாறும் தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் வி.செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதம் இப்பிரதேசத்தில் மாமரங்கள் பூக்கக்கூடிய காலமாகையால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு "பென்தியொன்" (Pentheion) எனப்படும் மருந்தை விசிறவேண்டும் என்றும் -

இதனை விசிறுவதற்கு ஏற்ற தெளிகருவியே தமது அலுவலகத்தில் உள்ளது என்றும் - அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதனைப் பயன்படுத்துவது பற்றிய பயிற்சி வகுப்பும் செயல்முறைப் பயிற்சியும் கடந்த மாதம் 18ஆம் திகதி தொல்புரம் விவசாயிகள் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நடத்தப்பட்டது என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## வாய், உதடு, அண்ணப்பிளவுக்கான சத்திரசிகிச்சை நிபுணர்கள் வருகை

வாய், உதடு, அண்ணம் போன்றவற்றில் பிளவு ஏற்படும் பிறப்புக் குறைபாட்டை சீர்செய்வதற்கான சத்திரசிகிச்சை நிபுணர் குழு பேராதனையிலிருந்து வரவுள்ளது. இக்குழுவினர் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.போதனா வைத்திய சாலைக்குச் சமுகமளிக்கவுள்ளனர்.

வாய், உதடு, அண்ணப் பிளவுள்ளவர்களை சத்திரசிகிச்சைக்காக அன்றைய தினம் இந்த நிபுணர்கள் தெரிவுசெய்யவுள்ளனர்.

ஆகவே, இச்சத்திர சிகிச்சைக்காக ஏற்கனவே பதிவுசெய்தவர்களும் புதிதாக பதிவு செய்து கொள்பவர்களும் 10ஆம் திகதி காலை 8 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலைப் பற்சிகிச்சைப் பிரிவுக்கு வருமாறு பற்சிகிச்சைப் பிரிவின் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (ஓ-139)

## லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின்கீழ் 74பொலிஸார் உட்பட 168பேர் கைது!

கொழும்பு,மார்ச்4

லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் அண்மைக்காலத்தில் லஞ்ச ஒழிப்பு சட்டத்தின் கீழ் 168 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அந்த ஆணைக்குழு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைகளை எதிர்நோக்கும் இவர்களில் 161 பேர் அரசாங்க ஊழியர்களாவர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பிரதிப் பொலிஸ்மா அதிபர், மூத்த பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அத்தியட்சகர், பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகிய பதவிகளை வகிக்கும் தலா ஒவ்வொருவரும் -

3 பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், 5 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட பொலிஸ் திணைக்களத்தைச சேர்ந்த 74 பேரும் -

வனபரிபாலனத் திணைக்களத்தைச் சேர்ந்த 12 ஊழியர்களும், நீதி அமைச்சைச் சேர்ந்த 11 ஊழியர்களும், சுகாதார அமைச்சைச் சேர்ந்த 4 ஊழியர்களும், ச.தொ.ச களஞ்சிய முகாமையாளர் ஒருவரும், கமத்தொழில் சேவைத் திணைக்களத்தைச் சேர்ந்த உதவி ஆணையாளர் ஒருவரும் -

மாகாண சபை உறுப்பினர் ஒருவரும், உதவி சுங்க அத்தியட்சகர் ஒருவரும், மோட்டார் வாகன பரிசோதகர் ஒருவரும், நில அளவையாளர் ஒருவரும், கலால் ஆணையாளர் ஒருவரும், கலால் அத்தியட்சகர் ஒருவரும், உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவரும், புகையிரத பொது முகாமையாளர் ஒருவரும், ஸ்ரீலங்கா முதலீட்டுச் சபையின் முன்னாள் தலைவர் ஒருவரும் அடங்குகின்றனர் என்றும் - கூறப்பட்டது. (எ)

அந்தோனியார் உற்சவத்தில் கலந்துகொள்ள யாத்திரிகர்கள்

## சொந்தப் படகுகளில் கச்சதீவு செல்லலாம்

### ஆலயப் பரிபாலகர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்4

எதிர்வரும் 8ஆம்,9ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் பங்குகொள்ள விரும்புவோர் சொந்தப் படகுகளில் நேரடியாகப் பயணம் செய்ய முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல பரிபாலகர் அருட்திரு. எஸ்.செபநேசரட்ணம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் திருததலத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு அங்கு யாத்திரிகர்கள் சென்று வருவதற்கு 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் குறிகாட்டுவான் மற்றும் நெடுந்தீவிலிருந்து காலை 6மணி தொடக்கம் படகுச்சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடு 8ஆம் திகதியும், திருவிழா திருப்பலி 9ஆம் திகதியும் ஒப்புக் கொடுக்கப்படும். முதல்திருப்பலி காலை 7மணிக்கும் திருநாள் திருப்பலி காலை 8.30மணிக்கும் ஒப்புக் கொடுக்கப்படும்.

இம்முறை சொந்தப் படகுகளில் நேரடியாக கச்சதீவுக்குப் பயணஞ் செய்யலாம். ஆனால், ஒரு பிளாஸ்ரிக படகில் 10பேர் மட்டுமே பயணஞ் செய்ய அனுமதி உண்டு.

குறிப்பாக ஆலயத்துக்கு வருகை தரும் போது குடிதண்ணீர், உணவு மற்றும் தேவையான பொருள்களை யாத்திரிகர்கள் எடுத்துவரவேண்டும்.

வியாபாரக் கடைகள் நிறுவ விரும்புபவர்கள் நெடுந்தீவு உதவி அரச அதிபரிடம் அனுமதி பெறவேண்டும்.

தவக்கால யாத்திரை என்பதனை கருத்திற்கொண்டு எந்த வகையான களியாட்டங்களும் மது பாவனையும் ஆலயச சூழலில் தடை செய்யப்பட்டுள்ளன என்று அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (எ-9)

## ஷெல்லால் பட்ட தென்னைமரம் முறிந்து விழுந்ததில் ஒருவர் காயம்!

### அரியாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

கடந்த காலப் போரின்போது ஷெல தாக்குதலுக்கு உள்ளாகி பட்டமரமான தென்னை ஒன்று முறிந்து விழுந்ததில் வயோதிபர் காயமடைந்தார்.

அரியாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நாகமுத்து நவரத்தினம் (வயது 72) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் காணி ஒன்றைத் துப்புரவு செய்துகொண்டிருந்ததாகவும் - கடந்த போரின்போது ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகிப் பட்டுப்போயிருந்த தென்னை மரம் ஒன்று அப்போது முறிந்து விழுந்ததாகவும் - துரதிர்ஷ்டவசமாக வயோதிபர் முறிந்துவிழுந்த துண்டின அடியில் சிக்கிக் காயமடைந்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மோட்டோறோலா ரெலிபோன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.தாஸ், சைவப்பாடசாலை வீதி, வல்வெட்டி. T.P. 070 212666. (15167)

கடைப் பாவனைக்குரிய 4 சோக் கேஸ் ராக்கைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.R. சரவணபவன், பிள்ளையார் கோயிலடி, தாவடி. T.P.021-222 5442. (15166)

## இசைக்குறிப்புகள்

புதிய சினிமாப் பாடல்களுக்கான இசைக் குறிப்புகள், மேலைத்தேய சங்கீத முறையிலும், கர்நாடக சங்கீத முறையிலும் அமைக்கப்பெற்று, புத்தகமாக வெளிவருகின்றது. தொடர்பு: S.S.றஜீந்திரன், 75, கோவில்வீதி, நல்லூர் (கைலாசபிள்ளையார் கோவிலிலிருந்து 300M தெற்கே). (15164)

## திருமண சேவை

எம்மிடம் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, லண்டன், சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ் நாடுகளிலுள்ள மணமக்களினதும் உள்நாட்டில் டாக்டர், இஞ்சினியர், எக்கவுண்டர், தனியார் துறையில் பணிபுரியும் தராதரமுள்ள மணமக்களின் குறிப்புக்களும் உண்டு. தொடர்பு: கல்யாணமாலை திருமணசேவை, 235/7, பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்; 67A, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13. T.P. 338162 Fax 338161. (15133)

## மணமகள் தேவை

யாழ்.கிறிஸ்தவ (Roman Catha lic) கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, தற்பொழுது ஜேர்மனியில் பிரஜாவுரிமை பெற்ற, 36 வயது; 5'8" உயரமுடைய மணமகனுக்கு 31வயதுக்குட்பட்ட, 5'4" உயரமுடைய, மெல்லிய, சிவந்த மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1810,C/o உதயன், யாழ்ப்பாணம். (15148)

## தவறிவிட்டன

சுழிபுரத்தைச் சேர்ந்த அப்புத்துரை இராமலிங்கம் என்பவரின் தே.அ.அ. (இல.801210945V), பல்கலைக்கழக அ.அ., வி.அ.அ., வாகன இன்சூரன்ஸ என்பன வியாழக்கிழமை (27-02-2003) உடுப்பிட்டிச் சந்திக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இ.கிருஷ்ணராஜன், தேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.T.P.071-355326. (15145)

சந்தையா கிருபாகரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.780543590V) 28-02-2003 அன்று ஆனைக்கோட்டைக்கும் நலலூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: சந்திரபுரம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (15142)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நீர்வேலி மேற்கு கிராமசேவகா

**P.மகேந்திரன்** J/270

அவர்கள் கிராம அலுவலர் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று தமது சேவையை நலமுடன் தொடர நாம் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
*தக்குட்சம்பாதி, துன்னாலை மேற்கு, கரவெட்டி.*
பா.தவயோகம், த.குகதாசன் (குடும்பத்தினர்).
(15173)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி அன்னலட்சுமி கார்த்திகேசு

எமது அலுவலகத்தினைச் சேர்ந்த
**திருமதி சிவகௌரி குனேந்திரன்**

அவர்களின் அன்புத் தாயாரின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

யாழ்.உள்ளூராட்சி
உதவி ஆணையாளரும்,
ஊழியர்களும், யாழ்ப்பாணம்.
(15165)

---

# கண்ணீர் அஞ்சலி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் தருமலெட்சுமியின் மகன்

**அ.சிவமனோகரன்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*வேலணை மேற்கு.*
இ.அம்பிகாவதி (சிறியதந்தை) குடும்பத்தினர்.
(15163)

---

## ஆசிரியர்கள் தேவை

- தரம் 1 முதல் 5 வரை
- தரம் 10,11 - சமூகக்கல்வி
- தரம் 6 - சகல பாடங்களும் ஆங்கில மொழிமூலம்.

**சைன்,** உடுவில். (15162)

---

## அச்சு இயந்திரம் விற்பனைக்கு

1/3 அளவிலான அச்சு இயந்திரமும் அதற்கான எழுத்துக்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :
திரு. வ.யோகநாதன்
*ஒழுங்கைத் தோட்டம், வல்வெட்டி, வல்வெட்டித்துறை.* (15168)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நெல்லியடி கிழக்கு கிராம உத்தியோகத்தா

**திரு.க.குணராசா**

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு நாம் பாராட்டுவதோடு, அவர் மேன்மேலும் பதவி உயர்வு பெற்று சேவை புரிய வாழ்த்துகின்றோம்.

*மாலி சந்தி, கரவெட்டி.*
கி.பரமதாஸ், நா.யோகநாதன், மு.ஜெயபகீரதன், வ.சிறிஸ்கந்தராசா.
(C-26781)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாவாந்துறை வடக்கு
J/85 கிராம உத்தியோகத்தர்

**திரு.பொன்னுத்துரை தர்மபாலன்**

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு பாராட்டுகின்றோம். இவர் 1988-1989 ஆம் ஆண்டுகளில் எமது பிரிவில் (J/44) கடமைபுரிந்தபோது ஜனசக்தி திட்டத்தை அறிமுகப்படுத்தி திறம்பட சேவை புரிந்தமையை நினைவு கூருகின்றோம். அவர் மேன்மேலும் பல பதவியுயர்வு பெற வேண்டும் எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*நாவாந்துறை, யாழ்ப்பாணம்.* (15169)
சென்.மேரிஸ் சனசமூக நிலையம்,
கெனடி சனசமூக நிலையம்.

---


உங்களுடைய சமையலறைத் தேவைகளை
பூர்த்தி செய்யும் உலகப் புகழ்பெற்ற தயாரிப்புக்கள்



MULTI NATIONAL
KANCHAN
New Sumeet®
National
PREETT®

மிக்ஷர் கிறைண்டர் வகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ள

JAFFNA ELECTRICALS
141, POWER HOUSE ROAD, JAFFNA TEL: 021-222-5766
(C-26637)


---


# உங்கள் வீட்டு ஜெனரேட்டர்கள்

**2.4 Kva முதல் 7.0 Kva வரை**

மின் உற்பத்தித் துறையில் முன்னோடிகளான
**ஸ்ரெஃபில் (STEPHILL)**
வர்த்தகச் சின்னம் தாங்கிய பரவலான
தரமிக்க தயாரிப்புகள்

- எரிபொருள் விரயமற்றது, ஹொண்டா GX பெற்றோல் இயந்திரம் - சிக்கனமான பாவனைக்கு உகந்தது.
- மின் நிர்ணய பொத்தான்/ சக்தி மீறலைத் தவிர்க்கும் MCB பாதுகாப்பு
- எண்ணெய் மட்ட அவதானிப்பு, மின்சுருள் இயக்கி. சட்டத்தைச் சுற்றிக் கவசம். கனரக உருக்கு கட்டுப்பாட்டு பெட்டகம்.
- குறைவான இரைச்சல் 7 மீட்டர்களில் 73 dBA வீட்டின் உட்புறச் சூழல் தேவையற்ற சத்தத்தினால் மாசுபடாது
- பாதுகாப்பானது, நம்பிக்கையானது - பிரிட்டிஷ், ஐரோப்பிய தராதரங்களுக்கு அமைவாக இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டது.


12 மாத உத்தரவாதம்

CSSC

**The Ceylon Service & Supplies Co. Ltd.**
110, Dehiwela Road, Maharagama, SriLanka.
Tel: 94-1-746100, 94-(0)-75-554672/73 Fax: 941.851.915
e-mail: sersupce@mega.lk


---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.திரவியசிங்கம் வரதராஜன்**
(J/368 கரவெட்டி கிழக்கு கிராம உத்தியோகத்தர்)

எமது கிராமத்தின் நலனுக்காக அயராது உழைத்த தி.வரதராஜன் அவர்கள் கிராம அலுவலர் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு நாம் அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவருடன் கரவெட்டி பிரதேச செயலகத்தில் தரம் I பதவியுயர்வு பெற்ற ஏனைய கிராம அலுவலர்களையும் பாராட்டி அவர்கள் மேன்மேலும் பல பதவியுயர்வு பெற்றுச் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

கரவெட்டி கிழக்கு
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.
(15172)

---

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் சரஸ்வதி

அல்வாய் வடக்கு, பெற்றிக்கணாவத்தையைச் சேர்ந்த மாணிக்கம் சரஸ்வதி அவர்கள் 02.03.2003 ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் காலமானார்.

அன்னார் மாணிக்கம் அவர்களின் அன்பு மனைவியும், அருந்தவராஜா, ரஞ்சிதமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகராஜா (கண்டி), கிருஷ்ணராஜா (லண்டன்), இராசலக்ஷ்மி, ஜெயராஜா (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சோதிலிங்கம், செல்வலதா, பிரேமலதா, தர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும நிகாஷன், அருண்ஜர், நிரோஜனா, நிதர்சனா, மயூரி ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அல்வாய் வடக்கு, பெற்றிக்கணாவத்தை இல்லத்தில் இன்று மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அல்வாய் வடக்கு, பெற்றிக்கணாவத்தை. (சி-26778)
ஆ.சோதிலிங்கம் (மருமகன்)

# செபமாலைதாசரின் 107ஆவது பிறந்ததினம்

செபமாலைதாசர் சபையின் நிறுவுநர் அருள்திரு. வ.தோமஸ் அடிகளாரின் 107ஆவது பிறந்த தினம் எதிர்வரும் 7ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படவுள்ளது.

யாழ்.மண்ணில் பாண்டியன்தாழ்வில் 1886 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் திகதி பிறந்த தோமஸ் அடிகளாரின் நினைவாக 'செபமாலை ஆண்டும அடிகளாரின் செபமாலை சபைகளும்' என்ற தலைப்பில் யாழ்.அருள் ஆச்சிரமத்தில் அன்று கண்காட்சி இடம்பெறும்.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 30 - 04 - 1960

உதிர்வு 10 - 03 - 1997

### திருமதி யோகராணி சிவராசா

திதி : 04.03.2003

ஆண்டுகள் ஆறு மறைந்ததம்மா
உன் அன்பு முகம் மறையவில்லையே!

[ம]ட்டுவில் மத்தி
(சோமஸ்கந்த ச.ச.நிலையம் அருகில்),
சாவகச்சேரி.

(15161)

உங்கள் பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள்.

# வலி.தென்மேற்கில் இதுவரை 2,480பேர் மீள்குடியமர்வு

சண்டிலிப்பாய்,மார்ச்4

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் சண்டிலிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த வாரம் வரை இரண்டாயிரத்து 480 பேர் மீளக்குடியமர்ந்துள்ளனர். இவர்களில் வன்னிப் பிரதேசத்திலிருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர்களில் 67 பேருக்கு 15ஆயிரம் ரூபா மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

மீள்குடியமர்வுக்கான கொடுப்பனவை கோரி விண்ணப்பித்திருக்கும் ஏனையவர்களுக்கான விண்ணப்பங்கள் மேல் நடவடிக்கைக்காக யாழ். அரச செயலக புனர்வாழ்வு பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (ஒ-135)

# அமைச்சின் கடிதம் தனிச் சிங்களத்தில்

வலி.மேற்கு,மார்ச்4

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து தனிச் சிங்கள மொழியிலேயே சுற்றறிக்கைகளும் கடிதங்களும் குடாநாட்டிலுள்ள பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் இந்த அமைச்சில் இருந்து கிராம அலுவலர்களின் பதவி உயர்வு தொடர்பான கடிதம் தனிச் சிங்கள மொழியில் பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-175)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 14 - 07 - 1914



மறைவு 02 - 02 - 2003

### திருமதி சின்னத்துரை நவபாக்கியம்

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த அன்னையே!
உமது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவுச்செய்தி கேட்டு உடன் ஆறுதல் தந்து உதவிகள் செய்தோருக்கும், அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (2003. 03. 04) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*முருகன் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

(14905)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்


**தினம் ஒரு பரிசு - 25**

இன்று (04.03.2003) நடைபெறவுள்ள ஸிம்பாப்வே - பாகிஸ்தான் ஆட்டத்தில் எந்த அணி வெற்றியீட்டும்?

முழுப்பெயர் : ..............................................
முகவரி : ..............................................
அ. அட்டை எண்: ..............................................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (04.03.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 25, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

அருணஸ் தரும்
விசேட கூப்பன்களுக்காகக்
காத்திருங்கள்




## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது? (..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்ட நாயகன் யார்? (..............................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..............................................
முகவரி : ..............................................
அ.அட்டை எண்: ..............................................

**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்டோர் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**

இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

## இஸ்ரேலிய ராணுவ நடவடிக்கையில்

# கர்ப்பிணிப்பெண், சிறுவன் உட்பட எட்டு பலஸ்தீனர்கள் உயிரிழப்பு!

ஜெருசலேம்,மார்ச்4

காஸா பிரதேசத்தில் இஸ்ரேலியப் படையினர் நேற்று மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது கர்ப்பிணிப் பெண் மற்றும் சிறுவன் உட்பட 8 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

பலஸ்தீன அகதிகள் முகாமொன்றை இஸ்ரேலிய இராணுவம் நேற்று டாங்கிகள் சகிதம் முற்றுகையிட்டது. ஹமாஸ் இயக்க பிரமுகர் என்று கூறப்படும் ஒருவரை இஸ்ரேலியப் படையினர் கைது செய்ய முயன்றனர்.

இதனையடுத்து இடம்பெற்ற வன்முறை மோதல்களின் போதே 8 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

ஹமாஸ் இயக்கப் பிரமுகர்களின் வீட்டை இஸ்ரேலிய இராணுவம் தகர்த்தபோது இடிபாடுகளுக்குள் சிக்கி கர்ப்பிணிப்பெண் ஒருவர் உயிரிழந்ததாகவும் - அங்கு இடம்பெற்ற துப்பாக்கிச்சமரில் சூடுபட்டு 13 வயதுச் சிறுவன் இறந்ததாகவும் -

பலஸ்தீன மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர். பலஸ்தீன பொலீஸார் ஒருவர் ஹமாஸ் இயக்க உறுப்பினர் மற்றும் பொதுமகன்கள் இருவர் ஆகியோரும் இதில் இறந்துள்ளனர்.

இதேவேளை, ஆயுதம் தரித்த வேறு இருவரின் சடலங்களும் அங்கு காணப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இந்த வன்முறை மோதல்களில் குறைந்தது 40 பலஸ்தீனர்கள் காயமடைந்துள்ளனர்.

1987 ஆம் ஆண்டில் பலஸ்தீன ஹமாஸ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் அரசியல் தலைவராக இருந்த மொஹமட் தாஹா (வயது 67) மற்றும் அவரது 3 மகன்களை இலக்கு வைத்தே இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் இதில் அவர் கைது செய்யப்பட்டதாகவும் -

இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

பலஸ்தீன அதிகாரிகள் பயன்படுத்தும் வெள்ளை நிற ஜீப்களிலும் மஞ்சள் வர்ணம் பூசிய வாடகைக்கார்களிலும் இஸ்ரேலிய இராணுவத்தினர் அகதிமுகாமுக்குள் ஊடுருவியதாகவும் -

அவர்களுக்கு சுமார் 35 டாங்கிகளும், கவச வாகனங்களும் பக்கபலமாக உதவியதாகவும் - கூறப்பட்டது.



நிக்கரகுவா நாட்டு அழகிப் போட்டி மனகுவா நகரில் நடைபெற்றது. இதில் வெற்றிபெற்ற அழகி கிளாடியா கால்மரான் அழகு ராணியாக முடிசூட்டிக் கொண்ட காட்சி. பனாமாவில் நடைபெற இருக்கும் மிஸ் யூனிவோஸ் அழகிப் போட்டியில் கிளாடியா கலந்துகொள்வார்.



வன்முறை மோதலில் உயிரிழந்த பலஸ்தீனர் ஒருவரின் இறுதி ஊர்வலம்

## அலெக்ஸாண்டிரியா நூலகத்தில் தீ!

எகிப்தில் கடந்தாண்டு ஒக்டோபர் மாதம் விமரிசையாகத் திறந்து வைக்கப்பட்ட அலெக்ஸாண்டிரியா நூலகத்தில் பெரும் தீ அனர்த்தம் ஏற்பட்டது. உலகின் புராதன வரலாற்றைக் கற்பதற்கான மாபெரும் மையமாக இந்த நூலகம் விளங்கியது.

இத் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 29 பேர் மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். தீப் பற்றியதும் உச்சி மாடி வழியாக நூலகத்தில் இருந்தவர்கள் காப்பாற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மின்சாரக் கோளாறே தீ விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

புராதன அலெக்ஸாண்டிரியா நகரில் கிறிஸ்துவுக்கு முன் 295 ஆம் ஆண்டு தொலமி மன்னனால் நிறுவப்பட்ட நூலகம் கிறிஸ்துவுக்குப் பின் 4ஆம் நூற்றாண்டில் தீக்கிரையானது. அழிந்த அந்தப் புராதன நூலகத்தின் நினைவாகவே 230 மில்லியம் டொலர்கள் செலவில் இந்த நூலகம் கட்டப்பட்டது.

இங்கு சுமார் 2 லட்சத்து 40 ஆயிரம் புத்தகங்கள் - இவற்றின் 40 லட்சம் பாகங்கள் - கொண்ட நூலகம், கோளரங்கம், 5 ஆராய்ச்சி நிறுவனங்கள், 6 அரங்கங்கள், 3 நூதனசாலைகள் ஆகியவை அடங்கியிருந்தன.




## ஈராக் மீதான போரைத் தவிர்க்க

# சதாமைப் பதவி விலகக் கோரும் திட்டம் அரபு உச்சிமாநாட்டில் நிராகரிப்பு!

## அமெரிக்காவுக்கும் கடும் கண்டனம்

கெய்ரோ,மார்ச்4

போரைத் தவிர்க்கும் பொருட்டு ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் பதவி விலகுவதற்கான திட்டம் ஒன்று அரபு நாடுகளின் உச்சிமாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், இதனை விவாதிக்க பெரும்பாலான நாடுகள் மறுத்துவிட்டன.

எகிப்தில் நடைபெறும் இந்த உச்சிமாநாட்டில் ஐக்கிய அரபு இராச்சியம் இந்தத் திட்டத்தை சமர்ப்பித்தது. குவைத்தும் பஹ்ரெய்னும் ஆதரவு தெரிவித்தன.

இத்திட்டத்தின்படி, ஈராக் அதிபர் சதாம் ஹுசைனும், அவரது அரசில் அங்கம் வகிப்பவர்களும் பதவி விலகுவதன் மூலம் போரைத் தவிர்க்க வேண்டும். பதவி விலகிய பின்னர் அவர்களது பாதுகாப்புக்கும், அவர்கள் மீது அமெரிக்கா நடவடிக்கை எடுக்காமலிருப்பதற்கும் அரபு நாடுகளின் கூட்டமைப்பு உத்தரவாதம் அளிக்கும். இத்திட்டம் செயற்படுத்த ஆரம்பிக்கப்படும் நாளிலிருந்து 2 வாரங்களுக்குள் அதிபர் உட்பட ஈராக்கியத் தலைவர்கள் அனைவரும் பதவி விலக வேண்டும்.

அத்துடன் அவர்களை ஈராக்கிலிருந்து வெளியேற்ற வேண்டும். அதிபர் சதாமுக்கு அனைத்துவித உரிமைகளும் கிடைப்பது உறுதி செய்யப்படும். பொது மன்னிப்புக்கும் உத்தரவாதம் வழங்கப்படும். பின்னர் ஐ.நாவுடன் இணைந்து அரபு நாடுகளின் கூட்டமைப்பு ஈராக்கின் நிலைமையைக் கண்காணிக்கும். இவ்வாறு தனது திட்டத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் அதிபர் ஷேக் சைய்த்பின் சுல்தான் தெரிவித்திருந்தார்.

ஆயினும் இத்திட்டம் குறித்து 22 அரபு நாடுகள் பங்குபற்றிய உச்சி மாநாட்டில் விவாதிக்கப்படவில்லை. இதேவேளை, இந்த உச்சிமாநாட்டில்:-

ஈராக் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்புச் செய்வதை அரபு நாடுகளின் கூட்டமைப்பு வன்மையாக எதிர்க்கிறது. பேச்சு மூலமே ஈராக் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஐநாபாதுகாப்புச் சபையின் கோரிக்கையை ஏற்று ஈராக் தன்னிடம உள்ள பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமது திட்டம் குறித்து விவாதிக்கும் துணிச்சல் பெரும்பாலான அரபு நாடுகளுக்குக் கிடையாது என்று ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளியுறவு அமைச்சர் சவுத் அல் பைசல் உச்சி மாநாட்டின் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(ஒ)

## இரசாயன உயிரியல், மூலப்பொருள்கள் குறித்து

# ஐ.நா.கண்காணிப்பாளருடன் ஈராக் அதிகாரிகள் பேச்சு!

தன்னிடமுள்ளதாகக் கூறப்படும் இரசாயன மற்றும் உயிரியல் மூலப்பொருள்கள் தொடர்பாக ஐநா.ஆயுதக் கண்காணிப்பாளர்களுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஈராக் பேச்சு நடத்தியது.

அன்றைய பேச்சில் ஐநா.ஆயுதக் கண்காணிப்பாளர்களின் உபதலைவர் டிமிட்ரி டுபிரிகோவுடன் ஈராக்கின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். ஈராக்கில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் விகஸ் மற்றும அந்திரெக்ஸ் கிருமிகள் குறித்து அப்போது பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது ஒருபுறமிருக்க,

ஈராக்கை விட்டு வெளியேற வேண்டி நேரிடும் பட்சத்தில் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனுக்கும் அவரது குடும்பத்தவருக்கும் அடைக்கலம் அளிக்கத் தயாராகவுள்ளதாக வடகொரியாவில் உள்ள மகௌ சூதாட்ட விடுதிகளின் உரிமையாளர் ஸ்டான்லி ஹோ அறிவித்துள்ளார்.

ஹொங்ஹொங்கிலிருந்து வெளிவரும் 'சவுத் சைனா மோர்னிங் போஸ்ட்' என்ற பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

அதிபர் சதாம் மற்றும் அவரது குடும்பத்தினருக்காக ஒரு புதிய அரண்மனையை அமைத்துத் தருவதாக ஸ்டான்லி ஹோ வடகொரிய அரசிடம் தெரிவித்துள்ளதாக அப்பத்திரிகை கூறுகிறது.

(ஒ)

# சிகரெட் விளம்பரங்களுக்கு சர்வதேச ரீதியில் தடை

## 170 நாடுகள் உடன்பாடு

சிகரெட், சுருட்டு, பீடி உள்ளிட்ட புகையிலைப் பொருள்களின் விளம்பரங்களுக்கு முழுமையாக தடைவிக்க வகை செய்யும் சர்வதேச உடன்பாட்டை 170 நாடுகள் செய்துகொண்டிருக்கின்றன.

ஜெனீவாவில் இந்த உடன்பாடு கடந்த சனிக்கிழமை கையெழுத்தானது. சிகரெட் விளம்பரங்கள் சிகரெட் பெட்டிகளின் மீது ஒட்டப்படும் லேபிள்கள், சிகரெட் கடத்தல் உள்ளிட்ட அனைத்தையும் கட்டுப்படுத்தும் வகையில் அந்த உடன்பாடு அமைநதுள்ளது.

ஆனால், உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள அளவுக்கு கடுமையான தடைகளை நாங்கள் விதிக்க முடியாது என்று அமெரிக்காவும் ஜேர்மனியும் எதிர்ப்புத் தெரிவித்தன. எனினும், அந்த உடன்பாடு நிறைவேறுவதைத் தடுக்காமல் விட்டுவிட்டன.

இதேவேளை, உலக சுகாதார நிறுவனத்தின் கூட்டம் மே மாதம் நடக்கவுள்ளது. அதில் பங்கேற்கும் உலக நாடுகளின் அமைச்சர்களால் அந்த உடன்பாடு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

சிகரெட் தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனங்கள் எவ்வித சமூக அககறையுமின்றித் தீவிரமாக தமது விளம்பரங்களைச் செய்கின்றன. அதனால் பெரிதும் பாதிக்கப்படுவது ஏழை நாடுகள்தான் என்று வளரும் நாடுகள் கூறின.

(ஒ)

# துருக்கிய நாடாளுமன்ற முடிவால் அமெரிக்காவுக்கு பேரதிர்ச்சி!

அங்காரா,மார்ச்4

ஈராக்கிற்கு எதிராகப் போரிடும்போது அமெரிக்கப் போர் விமானங்கள துருக்கியில் இறங்குவதற்கு அனுமதி அளிக்க அந்நாட்டு நாடாளுமன்றம் மறுத்துவிட்டது.

அமெரிக்கப் போர் விமானங்களுக்கு வகை செய்யும் சட்டமூலம் மீது துருக்கிய நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடந்தது. அதற்கு ஆதரவாக 250 எம்பிக்களும், எதிராக 264 எம்.பிக்களும் வாக்களித்தனர். துருக்கியின் ஆதரவு கிடைக்கும் என்று நம்பிக்கை கொண்டிருந்த அமெரிக்காவுக்கு இச்செய்தி அதிர்ச்சி அளித்துள்ளது.

துருக்கிப் பிரதமர் அப்துல்லாகுல் இந்தவாக்கெடுப்புக்குப் பிறகு அமைச்சர்களை அவசரமாக அழைத்துப் பேசினார்.

துருக்கியில் உள்ள அமெரிக்கத தூதர் ரொபர் பியர்சன், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகத்துக்கு விரைந்து சென்று ஆலோசனை நடத்தினார். ஆதரவான முடிவு கிடைக்கும் என்று நம்பிக்கை கொண்டிருந்தோம். அடுத்து நாங்கள் என்ன செய்வது என்று துருக்கி அரசின் ஆலோசனைக்காக காத்திருக்கின்றோம் என்றார் அவர்.

ஈராக்கின் வடபகுதியில் துருக்கி அமைந்துள்ளது. அங்கு அமெரிக்கப் போர் விமானங்களுக்காக தளம் அமைந்துவிட்டால் ஈராக்கின் தெற்கு, வடக்கு ஆகிய இரு பகுதிகளில் தாக்குதலை நடத்த முடியும். இதனால, ஈராக்கின் இராணுவத்தை இரண்டாகப் பிரித்து விடலாம் என்று அமெரிக்கா வியூகம் வகுத்துள்ளது. துருக்கியில் 255 போர் விமானங்கள், 62 ஆயிரம் இராணுவ வீரர்கள் மற்றும் 65 ஹெலிகொப்டர்களை நிறுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இந்த நிலையில் துருக்கிய நாடாளுமன்றத்தின் இந்த முடிவு, அமெரிக்காவுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் குவைத்தைத் தாக்கக்கூடிய வகையில் ஈராக்கின் ஏவுகணைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

குவைத்தில் இருந்து ஈராக் நோக்கி முன்னேற இருக்கும் அமெரிக்க இராணுவத்துக்கு ஈராக்கின் ஏவுகணைகளால் ஆபத்து ஏற்படும் என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்த ஏவுகணைகள் குவைத் நகரம் வரை பாயக்கூடியவை. இதனால் குவைத்தை பாதுகாக்க அமெரிக்காவால் முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

150 கிலோ மீற்றர் தூரத்துக்கு அதிகமாக தொலைவு சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை தயாரிக்கக்கூடாது என்று ஈராக்கிற்கு ஐநா. சபை தடை விதித்துள்ளது. ஐநா. சபையின் தடையை மீறி தயாரிக்கப்பட்ட ஏவுகணைகளை ஈராக் ஞாயிற்றுக்கிழமை அழித்தது. ஐநா.அதிகாரிகள் முன்னிலையில் பக்தாத் அருகே இந்த ஏவுகணைகள் அழிக்கப்பட்டன.

## அம்பாறை, மட்டக்களப்பு கல்வி மாவட்டங்களில்

# வெள்ள நிவாரண முற்பணம் வழங்குவதில் பாரபட்சம் ஏன்?

## ஆசிரியர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் கேள்வி மாகாண கல்வி அமைச்சின் மீது கடும் பாய்ச்சல்

சாய்ந்தமருது,மார்ச்4

**அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அண்மையில் பெய்த அடைமழை காரணமாகப் பாடசாலை ஆசிரியர்களுக்கு வெள்ளக் கஷ்ட நிவாரண முற்பணம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டது ஏன்? ஆசிரியர்கள் கொதித்துக் கெம்பி எழுந்து இப்படிக் கேள்வி எழுப்புகிறார்கள்.**

**இதுசம்பந்தமாக நியாயம் கேட்டு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜயவர்த்தனவுக்கு தென்கிழக்கு கல்விப் பேரவை மகஜர் ஒன்றை அனுப்பியிருக்கிறது.**

அம்பாறை, மட்டக்களப்பு கல்வி மாவட்டங்களில் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள 14 தேசியப் பாடசாலைகளும் மாகாணக் கல்வி அமைச்சின் பொறுப்பில் உள்ள 517 பாடசாலைகளும் இயங்கிவருகின்றன.

மத்திய அரசின் திறைசேரி அறிவுறுத்தலின்படி 14 தேசியப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோருக்குக் கடந்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் ஒரு மாதச் சம்பளம் வெள்ளக் கஷ்ட நிவாரண முற்பணமாக வழங்கப்பட்டுவிட்டது.

இந்த வெள்ளக் கஷ்ட நிவாரண முற்பணக் கொடுப்பனவை மாகாணப் பாடசாலை ஆசிரியர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோர் உட்பட பாதிக்கப்பட்ட அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். எனினும், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அதைக் கவனத்தில் எடுக்கவில்லை, காரியம் நடக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

28ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்குப் பணம் இல்லை என்றால் மத்திய திறைசேரியிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை இருந்தும் திருகோணமலையில் உள்ள மாகாணக் கல்வி அமைச்சும், மாகாணத் திறைசேரியும் அக்கறையின்றி, அசமந்தமாக ஏனோதானோ என்று இருந்தது ஏன் என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் மழை - வெள்ள அனர்த்தம் ஏற்பட்டிருந்தால் அங்குள்ள மாகாணப் பாடசாலை ஆசிரியர்கள், மாகாணக் கல்வி அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோருக்குக் கஷ்ட நிவாரண முன்பணம் வழங்கப்பட்டிருக்காதா என்ன? வழங்கவில்லை என்றால் அவர்கள் எல்லோரும் மாகாணக் கல்வி அலுவலகத்தையும் மாகாணத் திறைசேரியையும் சும்மா விட்டுவைப்பார்களா?

கல்வி அலுவலகங்களும் பாடசாலைகளும் மத்திய கல்வி அமைச்சின் பொறுப்பில் இருந்தாலும் சரி, மாகாணக் கல்வி அமைச்சின் பொறுப்பில் இருந்தாலும் சரி அவற்றில் பணியாற்றுபவர்களுக்கிடையே பாரபட்சம் காட்டலாமா? அது முறையா? நீதியா? மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட ஆசிரியர்களும் கல்வி அதிகாரிகளும் ஊழியர்களும் இந்தக் கேள்விகளைத்தான் எழுப்புகிறார்கள்.

அதேவேளை, மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணத் திறைசேரி ஆகியவற்றின் பொறுப்பற்ற நடத்தையை வன்மையாகக் கண்டிக்கிறார்கள்.

இப்போதாவது தமக்கு வெள்ளக் கஷ்ட நிவாரண முற்பணம் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று ஆளுநரைக் கேட்டிருக்கிறார்கள்.

அவருக்குக் கல்விப் பேரவை அனுப்பிய மகஜரில் நிலைமை தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. (எ)




**யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.**

**நிகழ்வுக்குத் தலைமை வகித்த லீக்கின் முன்னாள் தலைவர் எஸ்.ரீ.கணநாதன் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட எஸ்.கிளீபேட் அன்ரனிப்பிள்ளை, அமரர் ஏ.ஜோன்மாஸ்ராரின் பாரியார், எம்.பிரான்சிஸ், பீ.ஜேக்கப், அமரர் பி.ஆர் தம்பிநாயகத்தின் பாரியார் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.**

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

செம்பியன்பற்று,மார்ச்4

குடத்தனைப் பகுதியில் நாளுக்கு நாள் கசிப்பு விற்பனை அதிகரித்து வருவதாக அப்பகுதிப் பொது அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

கசிப்பு உற்பத்தி செய்வோர் சிலர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டும் கூட அப்பகுதியில் கசிப்பு விற்பனை அதிகரித்துள்ளது.

இங்குள்ள காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று இருப்பதாகவும் -

இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இப்பகுதி பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (ஓ-36)

# விறகு என்ற போர்வையில் வரணியில் மரங்கள் அழிப்பு

வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து கூட்டம் கூட்டமாகவரும் குழுவினராலும், தனிநபர்களினாலும் வரணிப் பிரதேசத்திலும், மந்துவில் - கொடிகாமம் பிரதேசங்களிலும் விறகுத் தேவைக்காக தினமும் பசுமை மரங்களான நாவல், வேம்பு, பூவரசு மற்றும் பசுமை தரும் மரங்கள் அடாத்தாகவும், களவாகவும் வெட்டிச் செல்லப்படுகின்றன.

பெரும்பாலும் மக்கள் இல்லாத பகுதிகளிலும், சீருடையினரின் முகாம உள்ள பகுதிகளிலும் உள்ள மரங்களே இவ்வாறு வெட்டப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன. காலை வேளைகளில் கூட்டம் கூட்டமாக சைக்கிள்களில் வரும் இவர்கள், பட்டப்பகலில் வெட்டப்பட்ட விறகுகளை பகிரங்கமாகக் கொண்டு செல்வதை கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் தினமும் பார்க்கக்கூடியதாக உள்ளது.

இப்படியான பகல் திருட்டுச் செயலைத் தடுக்க முயன்ற பொதுமக்களை மறித்தி, கோடரிகளைக் காட்டி பயமுறுத்திய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்படியான காரணங்களால் போர்க்கால சூழ்நிலையில் பாதிப்படைந்த பொதுமக்கள் இவற்றைத் தடுக்கும் வலு இன்றி இருப்பதும், நடப்பது நடக்கட்டும் நமக்கேன் வம்பு என்ற மனநிலையில் இருப்பதுமே இவ்வாறான திருட்டுக்கள் தொடர்வதற்குக் காரணமாகும்.

கிராம உத்தியோகத்தர்களிடமும இவ்வாறான அடாத்தான செயல்களைத் தடுக்கும் வலிமை இல்லை என்றே கூறவேண்டும். இதேவேளை, பாதுகாப்பு படையினரின் முகாம்களுக்கு அருகில சீருடையினரின் நட்பைப் பெற்று அருகில் உள்ள பாரிய மரங்களை தறித்துக் கொண்டு சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவை பற்றி பாதுகாப்பு நிலைகளில் உள்ள சீருடையினரிடம் முறையிட்டும் பலன் ஏதும் கிட்டவில்லை.

**செய்திக் கட்டுரை**

வீட்டுத் தகரப் படலைக்குப் போடப்பட்ட மரத்திலான தூணை படலையைக் கழற்றி வைத்துவிட்டு எடுத்துச் சென்ற சம்பவம் கடந்த காலத்தில் வரணியில் நடைபெற்ற உண்மைச் சம்பவமாகும். இயற்கை வளம் இவ்வாறு கண்டபடி அழிக்கப்படுவதை பார்த்து மக்கள் மனம் நொந்து போய் உள்ளனர்.

மேலும், இப்படியானவர்களால் அயலில் உள்ள தென்னை மரங்களில் தேங்காய்கள் பிடுங்கப்பட்டு கொண்டு செல்லப்படுவது சர்வசாதாரண நிகழ்வாகும். அருகில் உள்ள காவலரண்களில் உள்ள சீருடையினரின் நட்பைப் பெற்று அவர்களுக்கு இளநீர் பிடுங்கிக்கொடுத்துவிட்டு தேங்காய்களைக் கொண்டுசெல்லும் நிலையும் உள்ளது.

இந்தப் பாணியில் பனை வடலிகளில் உள்ள ஓலைச் சார்புகளை வெட்டிக்கொண்டு செல்பவர்களும் உண்டு. பனையோலைச் சார்புக்கு நல்ல மவுசு ஏற்பட்டுள்ளதே இதற்குக் காரணமாகும்.

மேலும் சீருடையினரும் தமது முகாம் வேலிகளை மறைப்பதற்கு தென்னோலைகளை வெட்டி எடுத்துச் செல்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு மரத்தை மொட்டையாக்கிவிட்டு தென்னோலைகளை வெட்டிச் செல்வதனால் தென்னைகளின் காய்க்கும் தன்மை குறைந்து செல்வதும் குறிப்பிடத்தக்கது.

**வரணி செய்தியாளர்**

அடிக்கடி தென்னோலைகள் வெட்டப்படுவதனால் தென்னை மரங்கள் பட்டுப்போகும் ஆபத்தும் உருவாகியுள்ளது.

இவ்வாறான செயல்களைத் தடுப்பது மற்றும் இயற்கை வளம் அழிக்கப்படுவதை எதிர்காலத்தில் தடுப்பது யார்? இதுவே வரணிப் பகுதி மக்கள் மனத்தில் எழுந்துள்ள கேள்வி.

## எழுப்புதல் கூட்டம்

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த மாதம் 28ஆம் திகதி முதல் நாளை வரை தெய்வீக, சரீர சுகமளிக்கும் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

இதில் எக்காளத்தொனி ஊழியங்களின் ஸ்தாபகரும், நிர்வாகியுமான பாஸ்டர் மேவின் குணசெல்வம் மற்றும் பாஸ்டர் இயன் கிறிஸ்ரென்சன் ஆகியோர் தேவ நற்செய்திகளை அளிக்கின்றார்கள். (ஓ)

## பிள்ளைகளை உற்சாகப்படுத்த

# பாடசாலைகளின் நிகழ்வுகளுக்கு பெற்றோர் சமுகமளிக்க வேண்டும்!

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

குருநகர்,மார்ச்4

யாழ்ப்பாணத்திலுள்ள பல பாடசாலைகளிலும் தற்போது மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் தமது பிள்ளைகள் காட்டும் திறமைகளைக் கண்டு உற்சாகமூட்டும் வகையில் பெற்றோர்கள் இப்போட்டி நிகழ்வுகளுக்கு சமுகமளிக்க வேண்டும்.

நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டியில் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போது யாழ்.கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

முதன்மை விருந்தினர் நா.வரதராசா தொடர்ந்து தமதுரையில் தெரிவித்ததாவது:-

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் பாடசாலைகளில் உள்ள பௌதிக வளப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவ முடியும்.

போட்டிகளில் பரிசுகளை பெறுவது முக்கியமல்ல. வெற்றி தோல்விகளைப் பொருட்படுத்தாது அனைவரும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும். மாணவர்கள் விளையாட்டுக்களில் குழுவாகக் கலந்துகொள்வதன் மூலம் எதிர்காலத்தில் ஒன்றான - ஒற்றுமையான - சமூகமாகச் சேர்ந்திருக்கும் பயிற்சியை பெற்றுக்கொள்கிறார்கள்.

பெற்றோர்கள் தமது வீட்டில் பிள்ளைகளுக்கு பாடங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். வீண் பொழுதைப் போக்காது ஓய்வு நேரங்களை மாணவர்கள் நல்ல வழிகளில் பயன்படுத்த வழிகாட்ட வேண்டும் - என்றார் அவர்.

நாவாந்துறை நல்லாயன் கன்னியர்மடத் தலைவி அருட்சகோதரி சகாய மரியாவும் உரை நிகழ்த்தினார். (ஓ-51)

# நாளை விபூதிப் புதன்

நாளை புதன்கிழமை கிறிஸ்தவத் திருநாளான விபூதிப் புதன் ஆகும். இதனையொட்டி கத்தோலிக்க தேவாலயங்களில் நாளை விசேட திருப்பலி நடைபெறும். யாழ்.மரியன்னை பேராலயத்தில் நாளை காலை 6.30 மணிக்கு யாழ்.ஆயரால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகளை நினைவுகூரும் ஆரம்ப நாளான நாளை தொடக்கம் வீண் அடம்பரங்கள், கொண்டாட்டங்கள், மதுபாவனையை மறந்து பக்தியுடன் ஆலய வழிபாடுகளில் ஈடுபடுமாறு கிறிஸ்தவ மக்களை யாழ்.பேராலய பங்குத்தந்தை வண பிதா மைக்கல் சௌந்தரநாயகம் அடிகள் கேட்டுள்ளார். (ஓ-51)

# பாதிப்படைந்த பெண்களுக்கு 'கவசம்' அமைப்பினர் உதவி

யாழ்ப்பாணம்,மார்ச்4

சாந்திகத்தின் அனுசரணையுடன் செயற்படும் 'கவசம்' அமைப்பினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட பெண்கள் மேற்படி அமைப்புடன் தொடர்பு கொண்டு தமக்கான உதவிகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்று அமைப்பின் இணைப்பாளர் திருமதி பானு தவநாயகம் தெரிவித்துள்ளார். உதவிகளைப் பெற விரும்பும் பாதிப்படைந்த பெண்கள் சாந்திகம், இல.15, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் அல்லது யாழ். போதனா வைத்தியசாலை, அறைஎண் 30 ஆகிய முகவரிகளில் உள்ள தமது பணிமனைகளுடன் தொடர்பு கொள்ளும்படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த இரு இடங்களில் ஒன்றில் தொடர்பு கொண்டு இலவச மருத்துவ உதவி, உளவளத் துணை உதவி, குடும்ப உளவளத்துணை உதவி, சுயதொழில் ஊக்குவிப்பு உதவி போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-10)

# 'அழகெழல்' போட்டிக்கான விதிமுறைகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்4

பாடசாலை மாணவர்கள் மத்தியில் யாழ்.கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றத்தினால் நடத்தப்படவுள்ள 'அழகெழல்' போட்டிக்கான விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சித்திரம், நடனம், சங்கீதம், நாடகம் என நடத்தப்படும் இந்தப் போட்டிகளில் தரம் 4,5 வகுப்பு மாணவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

நடனம், சங்கீதம் ஆகிய போட்டிகளில் ஒவ்வொரு பாடசாலைகளில் இருந்தும் இருவர் மட்டுமே பங்குபற்றமுடியும்.

நாடகப்போட்டியில் 15 தொடக்கம் 20 மாணவர்கள் பங்குபற்றுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் -

போட்டிகள் 19ஆம், 20ஆம் திகதிகளில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வாக்காளர் இடாப்புப் பிரதிகள் வழங்கும் பணிகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

யாழ். மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் வாக்காளர் இடாப்பின் பிரதிகள் வழங்கும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். நடராசா அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தயாரித்தல் தொடர்பான வேலைகள் யாவும் இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்பு நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளதால் அதற்கு வசதியாகவே வாக்காளர் இடாப்புப் பிரதி வழங்கும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் -

எனவே வாக்காளர் இடாப்பின் பிரதிகள் வழங்கும் பணி நாளை புதன்கிழமை 5 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரையும இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் -

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம திகதியில் இருந்து வாக்காளர் இடாப்பு பிரதி வழங்கும் பணி மீள ஆரம்பிக்கப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-10)

## தேர் திருத்த வேலைக்கான கேள்வி அறிவித்தல்

பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் பாவனையில் இருக்கும் இரண்டாவது சின்னத்தேர் திருத்த வேலைகள் ஒப்பந்த அடிப் படையில் மேற்கொள்வதற்கு தகுதிவாய்ந்த ஆசாரியார்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வேலையைச் செய்துமுடிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் 30.03.2003 ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் விண் ணப்பங்களை அனுப்பிவைக்கவும். மேலதிக விவரங்களுக்கு *தலைவர், 9ஆம் திருவிழா திருப்பணிச்சபை, கந்தவனம் தேவஸ்தானம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை* என்னும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

*பொலிகண்டி.* (15180) - **கந்தவனம் தேவஸ்தானம்.**



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும்

**திரு.திருமதி யெஜக்குமார் தம்பதிகளின்**

**செல்வப் புதல்வன் ஆருசன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (04.03.2003) செவ்வாய்க்கிழமை சுவிற்ஸர்லாந்தில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அம்மா துசித்தா, அப்பா யெஜக்குமார், பிரான்ஸில் வசிக்கும் பெரியமாமா, கணேஸ் யெஜந்திரன், அமெரிக்காவில் வசிக்கும் சின்னமாமா யெஜக்குமார், சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் சிறி மாமா, ராசன் மாமா, வனிதா அன்ரி, ஜேர்மனியில் வசிக்கும் விஜிதா அன்ரி, சாந்தி பெரியம்மா, சிறி அங்கிள், ராசன் அங்கிள் குடும்பத்தினர், லண்டனில் வசிக்கும் முரளிமாமா, சசிமாமா, மானிப்பாயில் வசிக்கும் சின்ன அத்தை குடும்பத்தினர், கொக்குவிலில் வசிக்கும் தாத்தா சிவப்பிரகாசம், பிரதி மாமா, லலிதா அம்மம்மா, இணுவிலில் வசிக்கும் பெரிய தாத்தா, சின்னத் தாத்தா, சீனித் தாத்தா, தர்மலிங்கம் தாத்தா, யோகம்மா பாட்டி, சிவராசா தாத்தா குடும்பத்தினர்கள் அனைவரும் ஆருசனை சீருஞ் சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:

*பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (15175)

பொ.சிவப்பிரகாசம் (தாத்தா)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சுதுமலை தெற்கு கிராம அலுவலர்

**திரு.அ.சிவதாசன் J/130**

அவாகள் தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு நாம் அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பதவி உயர்வுகள் பெறவும், நீண்ட ஆயுளும், நிறைவான வாழ்வும் பெற்று வளமுடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

சுதுமலை மத்திய சனசமூக நிலையம்,
சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கம்,
சுதுமலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம். (15175)



IIS இன் விசேட கற்கை நெறிகள் ஆரம்பம்
09-03-2003 ஞாயிறு காலை 10.00 மணி

சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட
கணனி மாப்படுத்தப்பட்ட
கணக்கியல் கற்கை நெறி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
TATA நிறுவனத்தின் சான்றிதழ்

NEXT GENERATION

ARE YOU PLANNING TO STUDY IN ABROAD!
ARE YOU WILLING TO GET EMPLOYMENT ABROAD!
ARE YOU ANXIOUS TO GET FOREIGN SCHOLARSHIP AND TRAINING!

**IELTS**

International English Language Testing System Opens the way Examination is held by British Council Colombo. Certificate is Issued by the University of Cambridge, London.

INSTITUTE OF INFORMATICS STUDIES
No. 100, Clock Tower Road, Jaffna
Tel: 21 222 2831


## திருப்பாடுகளின் காட்சிக்கான பிரதி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்4

யாழ். திருமறைக்கலாமன்றம் தவக்காலத்தை முன்னிட்டு மேடையேற்றி வரும் திருப்பாடுகளின் காட்சிக்கான பிரதி வழங்கும் வைபவம் நாளை புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் நடைபெறவுளளது. 200 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள பங்கேற்கும் இப்படைப்பில் பங்குபற்ற விரும்பும் இருபாலாரும் நாளை மாலை 4.30 மணிக்கு யாழ். திருமறைக்கலா மன்றத்திற்கு வருகை தருமாறு அழைக கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - இம்முறை இத் திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் ஏப்ரல மாதம் 10 ஆம், 11 ஆம், 12 ஆம், 13 ஆம் திகதிகளில் 'பலிக்களம்' என்னும் பெயரில் மேடையேற்றப்படவுள ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-8)

## நாவற்குழி களஞ்சியத்தை பயன்படுத்த முடிவு

யாழ்ப்பாணம்,மார்ச்4

தற்பொழுது புனரமைக்கப்படுகின்ற நாவற்குழி களஞ்சியத்தை முழுமையாகப் பயன்படுத்தவுள்ளதாக யாழ்.செயலகத்திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

கடந்த 2000ஆம் ஆண்டு குடா நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலையினால் இக்களஞ்சியம் பெரும் சேதத்திற்கு உள்ளாகியிருந்தது. தற்பொழுது புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் நிதியுதவியுடன் இது புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்ததும் இங்கு பொருள் களஞ்சியப்படுத்தப்படவுள்ளதாகவும் -

அதன் முதற்கட்டமாக புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்த பகுதியில் ஒரு தொகுதி பொருள்கள் உடன் களஞ்சியப்படுத்தப்படவுள்ளதாகவும் - அவர் தெரிவித்தார்.

தற்பொழுது கோண்டாவில் புகையிரத நிலையப் பகுதியில் செயற்பட்டு வருகின்ற களஞ்சியத்தில் இருந்து இப்பொருள்கள் நாவற்குழி களஞ்சியத்துக்கு எடுத்துச்செல்லப் படவுள்ளன. (ஒ-10)

## சென்.பற்றிக்ஸ் மைதானத்தை அமைச்சு திருத்தும்

குருநகர்,மார்ச்4

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானம் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சினால் திருத்தியமைக்கப்படவுள்ளது. இத்தகவலை அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ இக்கல்லூரியில் அணமையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் உரைநிகழ்த்திய போது தெரிவித்தார்.

இவ்விளையாட்டு மைதானத்தை திருத்தியமைத்துத்தருமாறு கல்லூரி அதிபர் வண.பிதா ஜஸ்ரின் ஞானபிரகாசம் அடிகள் கோரிய போது அதனை இரு கட்டங்களாக இவ்வாண்டும் எதிர்வரும் ஆண்டுகளிலும் திருத்தித்தருவதாக அமைச்சா உறுதிமொழி வழங்கினார்.

(ஒ-51)


### விற்பனைக்கு

மோட்டோ ரோலா தொலைபேசி விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
S.கேமா
இந்து தமிழ் கலவன்
பாடசாலை வீதி, கரவெட்டி.



### தேவை

1. கொம்பியூட்டர் ரைப் செற்றிங் தெரிந்தவர்கள். (சம்பளம் 3500 - 6000 வரை)
2. வெல்டிங் வேலை அனுபவமுள்ளவர்கள். (சம்பளம் 3500 - 6000 வரை)
3. ஓவிய வேலை பயிலுநர்கள். பயிற்சிக்காலத்தில் 1500/= வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு

**யசோ**

35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0777 - 110610


## பருத்தித்துறையில் எம்.பி.அலுவலகம்

வடமராட்சி,மார்ச்4

வடமராட்சி பிரதேச மக்களின் வசதிகருதி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பருத்தித்துறை விஸ்வகுல ஒழுங்கையில் தனது அலுவலகம் ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இயங்கவைத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்துடன் தொடர்பு கொள்ள விரும்புவோர் தினமும் காலை 8.30 மணிமுதல் 12.30 மணி வரையும், பிற பகல் 4.30 மணிமுதல் 6.00 மணி வரையும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-173)


### தேவை

யானை மார்க் குளிர்பான சோடா விற்பனை நிலையத்திற்கு கூலி ஆள்கள் தேவை.

*தொடர்பு :*

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**

(15188) 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.



### அறிவித்தல்

## எக்ஸ்போ ஏவியேஷன்

விமானப் பயணிகளின் வசதிக்கேற்ப புதிய கால நேர அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| திங்கள், செவ்வாய், சனி | - | இரத்மலானை | - 08.00 |
| | | யாழ்ப்பாணம் | - 10.00 |
| புதன்கிழமை | - | இரத்மலானை | - 06.30 |
| | | யாழ்ப்பாணம் | - 08.15 |
| வெள்ளிக்கிழமை | - | இரத்மலானை | - 10.45 |
| | - | யாழ்ப்பாணம் | - 12.30 |

★ 50 நிமிட சொகுசான பயணம் ★ இலவச போக்குவரத்து
யாழ். - பலாலி - யாழ்.
கொட்டாஞ்சேனை - இரத்மலானை - கொட்டாஞ்சேனை

*குறிப்பு:* புதன், வெள்ளி ஆகிய தினங்களுக்கு பயணச்சீட்டு பெற்றுக் கொண்டவர்களும் கவனிக்கவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
021 - 222 3891 071 - 348888
071 - 349999 (15184)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசசிங்கம் தங்கம்

உடுப்பிட்டி, தொண்டமானாறைச் சேர்ந்த திருமதி இராசசிங்கம் தங்கம் அவர்கள் கடந்த 25.02.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பையா இராசசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் சிவலிங்கம் (கனடா), ஞானசேகரம் (சுவிஸ்), நேசமலர், சிவானந்தி, சிவமலர் (கனடா), தியாகராசா (கனடா), வாமதேவன் (கனடா), தனசேகரம் (கனடா), புனிதவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2003) செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*உடுப்பிட்டி வீதி,*
*தொண்டமானாறு.* (15183)

ப.பார்த்தீபன் (பேரன்)

### வைரமுத்து பாலச்சந்திரன்

வட்டு.வடக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த வைரமுத்து பாலச்சந்திரன் அவர்கள்(பொறியியலாளர், இலங்கை உப்புக் கூட்டுத்தாபனம்) 02.03.2003 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் கி.வைரமுத்து(பிரசித்த நொத்தாரிஸ்) அவர்களதும் திருமதி சிவபாக்கியம் வைரமுத்து அவர்களதும் அன்புப் புதல்வரும் திருமதி பா.நவயோகம் அவர்களின் கணவரும் திருமதி சி.நளாயினி, செல்வி தயாளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வை.சபாநாதன் (இளைப்பாறிய முகாமையாளர், இலங்கை வங்கி), திருமதி சத்தியவதி, தவரத்தினராசா, திருமதி கலாவதி குலநாயகம் (ஆசிரியை, சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி), வை.சுந்தரேசன்(ஆங்கில போதனாசிரியர், யாழ். பல்கலைக்கழகம்), திருமதி ரேவதி சியான்(ஆசிரியை, புத்தளம் ஸாகிரா கல்லூரி), வை.சிவாஜி (சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு), திருமதி புனிதவதி கஜேந்திரன்(தாதிய உத்தியோகத்தர், அரசினர் ஆதார வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு) ஆகியோரின் சகோதரரும் திருமதி ச.சூரியா, அ.தவரத்தினராசா (இளைப்பாறிய முகாமையாளர், தெங்கு ஆராய்ச்சி சபை), து.குலநாயகம்(இ.போ.ச. உத்தியோகத்தர், காரைநகர்), திருமதி செல்வமலர் சுந்தரேசன்(அதிபர், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை), சியான்(உதவிக் கல்வி அதிகாரி), திருமதி சி.கலாவதி, கஜேந்திரன்(முன்னாள் எழுதுவினைஞர், சங்கானை அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் மைத்துனரும் அமரர் ம.கனகரத்தினம்(பிரதம கணக்காளர்), திருமதி நல்லம்மா கணபதிப்பிள்ளை, ம.செல்வரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர், நவாலி) ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2003) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் வட்டு. வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*வட்டுக்கோட்டை வடக்கு,*
*சித்தன்கேணி.* (C/26783))

வை.சிவாஜி (சகோதரர்)

### திருமதி இராசரத்தினம் இலட்சுமிப்பிள்ளை

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் இலட்சுமிப்பிள்ளை நேற்று (03-03-2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சுப்பிரமணியம் மற்றும் விஜயரட்ணம், கோபாலபிள்ளை, வெற்றிவடிவேல், மங்கையர்க்கரசி ஆகியோரின் சகோதரியும் பவானி (சுவிஸ்), அருளானந்தம் (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்), மோகன் (கனடா), தயாளினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*இராசவீதி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (15185)

இ.அருளானந்தம் (மகன்)

# கல்வி அதிகாரிகளுக்கு கணனி பயிற்சி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்4

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல வலயக்கல்வி பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்க மாகாணக் கல்வித் திணைக்களம் ஒழுங்கு செய்திருப்பதாக வடக்குக் கிழக்கு மாகாண மேலதிகக் கல்விப்பணிப்பாளர் எஸ்சுப்பிரமணியம் தெரிவித்தார்.

மாகாணக்கல்வித் திணைக்களத்தின் சகல பிரிவுகளும் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன. வலயக் கல்வித் திணைக்களங்களும் அவ்வாறு கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நேரத்தில், கல்வி அதிகாரிகள் கணனி அறிவு பெற்றிருப்பது அவசியம் எனக் கருதப்படுவதால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் விடுதலைக் காலத்தில் இவர்களுக்கான கணனிப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை -

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்கிவரும் ஆசிரியர்களும், உயர் தொழில்நுட்பம் போதிப்பவர்களும் இந்தப் பயிற்சித் திட்டத்தில் இணைக்கப்படவுள்ளனர். என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-88)

### மெய்வன்மைப் போட்டி

கைதடி குருசாமி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் எஸ்.ஞானலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (ம-75-10)

# பழ.நெடுமாறனின் பிணை மனு நிராகரிப்பு

சென்னை,மார்ச்4

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியதாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனுக்கு பிணை வழங்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துள்ளது.

பொடா தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த சில மாதங்களாக கடலூர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பழ.நெடுமாறனுடைய பிணை மனு நேற்று திங்கட்கிழமை சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்டு ஒரு வார காலத்திற்குள் பிணை கோரி அவர் செய்த மனுவை பொடா நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. அவர் உயர் நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்திருந்தார். இந்த வழக்கில் பொடா நீதிமன்றில் குற்றப்பத்திரிகை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு விட்டதால் நெடுமாறன் மீண்டும் பிணை கோரி பொடா நீதிமன்றத்துக்குத்தான் மனு செய்ய வேண்டும் என்று கூறி சென்னை உயர் நீதிமன்றம் அவரது மனுவை தள்ளுபடி செய்துவிட்டது.

கடலூர் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் பழ.நெடுமாறன் உடல் நலக் குறைவு காரணமாக கடந்த பல நாள்களாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (ம-9)

# இந்திய அணி...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

"கங்குலி இந்தியாவுக்குச் சிறந்தவர். அவரை மிகச் சிறந்த தலைவர் என்று கூறமாட்டேன். எனினும், அவரது கர்வத்தையும் தனது வீரர்களைக் கையாளும் முறையையும் மதிக்கிறேன்.

ஏன் அவரை மக்கள் திட்டுகிறார்கள் என்று புரியவில்லை." என்றார்.

இச்சுற்றுப் போட்டியில் ஆஸ்திரேலியா சம்பியனாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், ஆசிய அணி ஒன்று சம்பியனாவதை அர்ஜுன விரும்புகின்றார்.

"இலங்கை அணியின் வாய்ப்புகளை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், இந்தியா இப்போடிகளில் பெரு வெற்றியீட்ட முடியும்."

- இவ்வாறு அர்ஜுன கூறியுள்ளார்.

இதேவேளை, சச்சின் டெண்டுல்கர் இந்தியாவுக்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என இம்ரான்கான் கூறியுள்ளார். இந்திய - பாகிஸ்தான் போட்டியின் பின் இம்ரான்கான் கருத்துத் தெரிவிக்கையில்,

"இந்தியாவின் துடுப்பாட்டம் பாகிஸ்தானின் பந்துவீச்சை முற்றாகத் துவம்சம் செய்துவிட்டது.

270 இற்கு மேற்பட்ட ஓட்டங்கள் பாகிஸ்தான் வெற்றி பெறுவதற்குப் போதுமானவை என்று நினைத்தேன். ஆனால், இந்தியா இலகுவாக வெற்றி பெற்றது.

டெண்டுல்கரின் 'இன்னிங்ஸ்'தான் இரு அணிகளுக்குமிடையிலான வித்தியாசம்.

வஸிம், சொஹைப் ஆகியோரின் பலத்தை டெண்டுல்கர் தகர்த்தார். இந்தியாவின் ஏனைய துடுப்பாட்ட வீரர்களின் பணியை அவர் இலகுவாக்கிவிட்டார்.

இதேவேளை, சச்சின் தொடர்ந்தால் இவர் இந்தியாவுக்குக் கிண்ணத்தைப் பெற்றுக்கொடுப்பார். - இவ்வாறு இம்ரான்கான் கூறினார்.

ஜவகல் ஸ்ரீநாத், ஸஹீர்கான், அஷிஸ் நெஹ்ரா ஆகியோர் அடங்கிய இந்திய வேகப்பந்துவீச்சுக் குறித்து இம்ரான்கானிடம் கருத்துக் கேட்கப்பட்டபோது

"நான் கண்ட மிகச் சிறந்த இந்திய பந்து வீச்சு வரிசை இது. ஸ்ரீநாத் நீண்ட காலம் அணியில் நீடித்திருக்கமாட்டார் என்பதே ஒரேயொரு பிரச்சினை" என்று பதிலளித்தார் இம்ரான்.

### மோசமான...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார். இளம் வீரர் யுவராஜ்சிங்கும் சிறப்பாக விளையாடினார்.

மொத்தத்தில் இந்திய வீரர்களுக்கு முழு மதிப்பெண்கள் கொடுக்கலாம். இந்திய அணி சிறப்பாக விளையாடி வருவதால் அவர்கள் அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுவிடுவார்கள் என்று நினைக்கின்றேன்.

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை மிகமிக வலுவாக உள்ளது.

நாங்கள் சுப்பர் சிக்ஸ்க்கு நுழைய வேண்டுமானால், பின்வாசல் ஏதவாது திறந்து இருக்கிறதா என்று தான் பார்க்கவேண்டும். இங்கிலாந்து - ஆஸ்திரேலியா போட்டி முடிவை பொறுத்து இது அமையும். அதன் முடிவை பொறுத்த ஸிம்பாப்வேயுடனான போட்டியை நாங்கள் திட்டமிடுவோம்.

- இவ்வாறு வக்கார் யூனிஸ் கூறினார். (ம)

### அன்வரின்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

விளங்குகிறார்.

இதேவேளை, இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் இப்போட்டியில் தனது துடுப்பாட்டத்தை தனது மூத்த சகோதரரான அஜித் டெண்டுல்கருக்கு சமர்ப்பணம் செய்துள்ளார்.

"உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக தென்னாபிரிக்காவுக்கு வரும் முன்னர் எனது சகோதரருடன் போட்டிகள் குறித்து நீண்ட கலந்துரையாடல்களை நடத்தினேன்.

இக்கலந்துரையாடல் எனது துடுப்பாற்றலுக்கு மிகவும் உதவியுள்ளது. - இவ்வாறு டெண்டுல்கர் கூறினார்.

1998இல் சார்ஜாவில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தொடர்ச்சியாக இரு சதங்களை அடித்தமையையே இதுவரை தனது சிறந்த துடுப்பாட்ட நிகழ்வு என டெண்டுல்கர் தெரிவித்திருந்தார்.

ஆனால், "சனிக்கிழமையன்று பாகிஸ்தானுடனான போட்டியில் 98 ஓட்டங்கள் பெற்றமையே மிகவும் சிறப்பானது" என டெண்டுல்கர் இப்போது தெரிவித்துள்ளார்.

இத்தொடரில் அவர் இதுவரை 469 ஓட்டங்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10)


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சின்னத்தம்பி தர்மலிங்கம் அவர்களின் தந்தை

### கந்தன் சின்னத்தம்பி

அவர்கள் 02.03.2003 அன்று இறைபதம் அடைந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவர் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், வலி.வடக்கு. (15191) நலன்புரிச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி ச.அருணகிரிநாதன் அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னத்துரை திருநாவுக்கரசு

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(15192) யாழ்.கல்விவலய இசையாசிரியர் கழகம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 07 - 1924



மறைவு 15 - 03 - 2002

திருமதி

### சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை

இன்று எம் அன்புத் தாயை நினைவிலேந்தி நின்று நாம் வணங்கித் தொழுகின்றோம்.

3ஆம் கட்டை, சுன்னாகம் பிறவிப்பன்காடு, யாழ்ப்பாணம். (15189) - குடும்பத்தினர்.



## நாகம்ஸ் சுன்னாகம்

ஸ்ரீகாந், சினேகா, பூமிகா நடித்த

### ஏப்ரல் மாதத்தில்

காட்சிகள்: 11.00, 1.30 (படி தோறும்) 7.00 மணிக்கு (விசேட)

THE MUMMY RETURNS

## நிர்மலா சினிமாஸ்

அஜித், மாளவிகா நடித்த

### உன்னைத் தேடி

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (படிநேர) வெள்ளி, சனி, ஞாயிறு இரவு (நேர) 8.45

"U-57"

## ராஜா யாழ்ப்பாணம்

கடைசி சில தினங்கள் விஜய், ஸ்நேகா, மணிவண்ணன் ... நடித்த

### வசீகரா

10.30, 2.30 மட்டும் 3 முதல் 5 வரை

TOM CRUISE MISSION IMPOSSIBLE - 2 அஞ்சாநெஞ்சன்

இரவு 7.00, 9.30 மட்டும்.



# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிருஸ்ணா தெய்வானை

செல்வபுரம், கரணவாய் தெற்கைச் சேர்ந்த திருமதி கிருஸ்ணா தெய்வானை நேற்றுமுன்தினம் (02.03.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கிருஸ்ணாவின் அன்பு மனைவியும் இரத்தினம் கமலாதேவி, தேவராசா பூமாதேவி, ஆனந்தம் (மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை), சோமசுந்தரம் யோகாதேவி, மாசிலாமணி மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (03.03.2003) திங்கட்கிழமை நண்பகல் 12மணியளவில் கிராய் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வபுரம், கரணவாய். (C/26786)

தகவல்: கி.ஆனந்தம் (பிரதம லிகிதர், மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை)

## சின்னத்துரை இந்திரநாதன்

சரசாலையைப் பிறப்பிடமாகவும் வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இந்திரநாதன் 02.03.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை கமலாதேவியின் அன்பு மகனும் கிட்டுனர் - மாணிக்கம் தம்பதிகளின் மருமகனும் நாகநந்தினியின் அன்புக் கணவரும் நிறூபன், புவிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஈஸ்வரநாதன் (சுவிஸ்), தேவநாதன் (லக்ஷ்மி ரான்ஸ்போட் உரிமையாளர், அச்சுவேலி), செல்வநாதன், காலஞ்சென்ற வசந்தி மற்றும் ஜீவநாதன் (பிரான்ஸ்), வாசுகி (யா/புனித திரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுமதி (சுவிஸ்), செல்வகுமாரி (அச்சுவேலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுவேதா, சுபேதன், சுஜீவன் (சுவிஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும் சோபனா, லக்ஸ்ஷனா, நிதர்சனா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2003) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு பத்தமேனியில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அச்சுவேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைரவர் கோவிலடி, பத்தமேனி, அச்சுவேலி. (15194)

தகவல்: சி.தேவநாதன் (சகோதரன்)

## இராசையா தம்பித்துரை

(இளைப்பாறிய தபாலதிபர்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய தபாலதிபர் இராசையா தம்பித்துரை நேற்று (03.03.2003) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை ஸ்தாபகரும், இராமகிருஷ்ண மிஷனுடன் இணைந்திருந்தவரும், ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தரின் சிஷ்யரும் யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளின் சிஷ்யருமாவார். அத்துடன் காலஞ்சென்றவர்களான இராசையா - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற பொன்னம்மா - இராசையா ஆகியோரின் பெறாமகனும் முருகையா (ஜேர்மனி), திருமதி சாரதாமணி - அருமைத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருமைத்துரை (கனக்கசன்), திருமதி கிருஷ்ணவேணி - முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனரும் செந்தில்குமரன் (லண்டன்), திருமதி பூங்கோதை பாலசுப்பிரமணியம், திருமதி மனோஜா சஞ்சீவ் (லண்டன்), செல்வி மீரா, பாலசுப்பிரமணியம், சஞ்சீவ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கீதாஞ்சலியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2003) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (15193)

தகவல்: சி.அருமைத்துரை (மைத்துனர்)

## திருமதி சின்னத்தம்பி இராசம்மா

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி இராசம்மா அவர்கள் நேற்று (03.03.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகளும் இராசையா மற்றும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யாமினி, சிவானந்தன், பரமேஸ்வரி, தங்கரத்தினம் (லண்டன் - சுவிஸ்), சிவமணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் துரைச்சாமி, இந்திராதேவி, பகவதி, சண்முகநாதன் (நாதன்), சுதா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் சுவிதா, அமல், சுதீஸ், சுகந்தி, கேசவன் (லண்டன்), சிங்கன், கஜன், பார்த்தீபன், வாணி, நோர்திகா, சீலன், அஜிந்தன், கஜந்தன் மற்றும் சுவிஸைச் சேர்ந்த கிரிஷா, கிரிஷாந், சுவியா, கங்கா மற்றும் மனோகரன், யோகராசா ஆகியோரின் பேர்த்தியும் பிருந்துஜன், கோபி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2003) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் மட்டுவில் வடக்கில் உள்ள சண்முகநாதன் (நாதன்) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுடுகாடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரி. (15195)

தகவல்: சி.சண்முகநாதன் (மருமகன்)

# World Cup Score card - 2003



ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி: இலங்கை
ஆட்டநாயகன்: அத்தப்பத்து
முடிவு: வெற்றி தோல்வி இல்லை (டக்வோர்த் லூயிஸ் முறை)

## இலங்கை

துடுப்பாட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| எம்.அத்தப்பத்து | c/பீற்றர்ஷன் (துணை) | b/கோல் | .... | 124 |
| சனத் ஜயசூரிய | run out (கேர்ஸ்டன்) | | .... | 16 |
| எச்.பி.திலகரட்ண | c/பௌச்சர் | b/கலிஸ் | .... | 14 |
| எம்.ஜயவர்த்தன | c/பௌச்சர் | b/கோல் | .... | 01 |
| ஏ.டி.சில்வா | c/சிமித் | b/நிற்னி | .... | 73 |
| பி.ஆர்னோல்ட் | | b/பொலக் | .... | 08 |
| கே.சங்கக்கார | c/பொலக் | b/கலிஸ் | .... | 06 |
| சி.வாஸ் | run out (பௌச்சர்) | | .... | 03 |
| எம்.முரளி | | b/கலிஸ் | .... | 04 |
| டி.பெர்னாண்டோ | not out | | .... | 01 |
| உதிரிகள் | | | .... | 18 |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | | .... | 268/9 |

களம் இறங்காதவர்கள்: டபிள்யு.குணரட்ண

பந்துவீச்சு

பொலக் : 10-1-48-1, நிற்னி : 10-0-49-1, ஸொண்டேகி : 6-0-35-0, கலிஸ் : 10-0-41-3, கோல் : 10-0-62-2, குளூஸ்னர் : 4-0-31-0.

## தென்னாபிரிக்கா

துடுப்பாட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஜி.சிமித் | c/குணரட்ண | b/டி.சில்வா | .... | 35 |
| எச்.கிப்ஸ் | | b/முரளிதரன் | .... | 73 |
| ஜி.கேர்ஸ்டன் | | b/டி.சில்வா | .... | 08 |
| ஜே.கலிஸ் | | b/ஜயசூரிய | .... | 16 |
| எச்.டிப்பென்னர் | lbw | b/ஜயசூரிய | .... | 08 |
| எம்.பௌச்சர் | not out | | .... | 45 |
| எஸ்.பொலக் | run out (சங்கக்கார / முரளி) | | .... | 25 |
| எல்.குளூஸ்னர் | not out | | .... | 01 |
| உதிரிகள் | | | .... | 18 |
| மொத்தம் | (45 ஓவர்கள்) | | .... | 229/6 |

களம் இறங்காதவர்கள் : கோல், நிற்னி, ஸொண்டேகி

பந்துவீச்சு

வாஸ் : 7-1-33-0, ஜயசூரிய : 10-0-49-2, டி சில்வா : 8-0-36-2, குணரட்ண : 6-0-26-0, முரளி : 9-0-51-1, தில்ஹார : 1-0-14-0, ஆர்னல்ட் : 4-0-16-0 *(ஆட்டம் சமநிலையில் முடிந்ததால் தென்னாபிரிக்கா 'சுப்பர்சிக்ஸ்' நிலைக்குத் தகுதி பெறவில்லை)*


LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்
பாதுகாப்பான ~ சௌகரியமான பயணம்
★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
பதிவுகளுக்கு :
லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/26688)
தொலைபேசி: 0777-733992


## நியூஸிலாந்து, நெதர்லாந்து நேற்று வெற்றி

கேப்டவுன், மார்ச் 4

உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற 'பி' பிரிவு நியூஸிலாந்து-கனடா ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய கனேடிய அணி 47 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப ஆட்டக்காரர் டேவிஸன் 62 பந்துகளில் 75 ஓட்டங்களை விளாசினார்.

பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து அணி 23 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

மற்றொரு ஆட்டத்தில் நமீபிய அணியை நெதர்லாந்து அணி 64 ஓட்டங்களால் வென்றது.

(ம)

## ஒப்பந்தத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களநிலை யதார்த்தம் மற்றும் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் தலைவர் அன்ரன் பாலசிங்கத்துக்கு எடுத்துக் கூறினார்.

போர் நிறுத்த உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களில் இதுவரை தீர்வு காணப்படாத் விடயங்களுக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என்று அடுத்த கட்டப் பேச்சுகளில் வலியுறுத்த வேண்டும் எனவும் தலைவர் எடுத்துக் கூறியுள்ளார்.

இவ்வாரம் வன்னியில் இடம்பெறவிருக்கும் இராஜ தந்திர நகர்வுகள் குறித்தும் இருவரும் மந்திராலோசனை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-3-164)

## விமானப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் ஆத்திரமுற்ற சிப்பாய் கோப்ரல் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் என்றும் கூறப்படுகிறது.

கோப்ரல் நிஹால் ரஞ்சித் கருணாதிலக என்பவரே உயிரிழந்தார்.

துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பியோட முயன்றதாகக் கூறப்படும் சிப்பாயைச் சக சிப்பாய்கள் மடக்கிப் பிடித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை நேற்று நடைபெற்றது. துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகக் கூறப்படும் சிப்பாய் சாளக சதேஷ் கருணாசேன ஹிங்குராங்கொட பொலீஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார். (ம)

## சிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இடம்பெற்றது.

சிப்பாயை பிணையில் விட வேண்டியமைக்கான காரணங்களை தெரிவித்து சட்டவாளர் வேலவர் தமது வாதங்களை முன்வைத்தார்.

சிப்பாயை பிணையில் விடக்கூடாது என்று தெரிவித்து அதற்கான காரணங்களை தமிழீழ காவல்துறையினர் தெரிவித்தனர்.

இரு தரப்பினரின் வாதங்களை கேட்ட நீதியாளர்கள் தமது தீர்ப்பை எதிர்வரும் 7ஆம் திகதி மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கு எடுக்கப்படும்போது அந்த நீதிமன்றத்துக்கு அனுப்புவதாக தெரிவித்தனர்.

பிரஸ்தாப சிப்பாய் எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-3)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவேதான் தொண்டர் ஆசிரியர்கள் நேற்று தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி மாகாணக் கல்வி அமைச்சின் முன்னால் காலை 6.00 மணிமுதல் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் குதித்தனர். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தொண்டர் ஆசிரியர்களின் ஒன்றியம் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

சத்தியாக்கிரகிகளைக் கலைந்து செல்லும்படி பொலீஸார் உத்தரவிட்டனர். அதற்கு எவரும் பணியவில்லை. ஒன்றியத்தின் முக்கியஸ்தர் ஒருவரைப பொலீஸார் பிடித்துப் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

தொண்டர் ஆசிரியர்கள் எவ்வளவு சொல்லியும் பொலீஸார் கேட்கவில்லை. மாகாணக்கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சகிதம் சென்று பொலீஸாரிடம் கதைத்தும் பயன் கிடைக்கவில்லை. தொண்டர் ஆசிரியர்கள் பொலீஸ் நிலையத்துக்கு முன் போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் ஏற்படும் என்று கல்விச் செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் பொலீஸ் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு அங்கே பொலீஸாரினால் பிடித்துச்செல்லப்பட்டவரை விடுவித்தார்.

"எமது இறுதிக் கட்டப் போராட்டம் நிரந்தர நியமனம் வழங்கப்படுமா, இல்லையா என்பதைப் பொறுத்துத் தான் அமையும். தருகின்ற உத்தரவாதம் எழுத்தில் தரப்படவேண்டும். தீர்க்கமான முடிவு எட்டப்படாத பட்சத்தில் எமது சத்தியாக்கிரகப் போராட்டம் தொடரும். அது உண்ணாவிரதப போராட்டமாகக்கூட மாறலாம்.

- இவ்வாறு தொண்டர் ஆசிரியர் சங்க ஒன்றிய முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர்.

தொண்டர் ஆசிரியர் விவகாரம் குறித்துப் பேசுவதற்கு கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனவிடம் சென்றார்.

திறைசேரி அனுமதி தந்தால் மட்டுமே தம்மால் நியமனம் வழங்க முடியும் என்று வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியாக்கிரகிகளிடம் தெரிவித்தார். தொண்டர் ஆசிரியர்களின் சத்தியாக்கிரகம் தொடர்கிறது.

(ம)

## நெடுந்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் உள்ளூராட்சித் திணைக்களத்திடம் முறையிட்டுள்ளார்.

அதைத் தொடர்ந்து சபையை இயக்குவதற்கு கட்டடத்தை ஒப்படைக்க ஏற்பாடு செய்யுமாறு மாகாண ஆளுநரிடம் யாழ்.உள்ளூராட்சித் திணைக்களம் கோரியுள்ளது.

அதேசமயம் - உள்ளூராட்சித் திணைக்கள தொழில்நுட்ப அதிகாரிகள் நேற்றுமுன்தினம் நெடுந்தீவுக்குச் சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்துள்ளனர். (ம-3)



Nandi Brand
Rupika Tile Factory
குறைந்த விலையில் தரமான ஓடுகள், முகட்டோடுகள், கற்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ARALIYA STORES
11, Negombo Road, Dankotuwa.
Tel: 031-58174
Udangawa
Kochchikade
Tel : 031-77346
JAFFNA
021-222 3268
(15136)
Best Quality Roofing Tiles



வல்வெட்டியில்... துமி வீதியில்...
! இணைய சேவைப் பூங்கா!
குறைந்த செலவில்! நிறைந்த சேவை!
ISP COMMUNICATION
எங்கும் பரபரப்பு! ஆனால் உண்மை!
CABLE LINE மூலம் துரிதமாக
இன்ரர்நெற் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்பு சேவையினை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும்
கொம்பியூட்டர் பிறின்ரிங் & CD றெக்கோடிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
வீடியோ CD வாடகைக்கு விடப்படும்
(15125)
இன்ரர்நெற் அழைப்பு 25/= 30/=
உள்வரும் அழைப்பு 1/=
உள்நாட்டு அழைப்பு 8/= T.P.- 021 226 3327



ASIAN COMPUTER SYSTEMS
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222 5677

Diploma in Computer Software Engineering
தமிழில் விளக்கங்களுடன் டிப்ளோமா பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பம்
Professional Diploma in Graphic Design
அனைத்து பாடநெறிகளுக்கும் இலவச பாடநூல்கள்
Diploma in Computer Programming
தவணைமுறைக் கட்டணங்கள்
Microsoft Office XP
Diploma in Desktop Publishing
Diploma in Web Design
விபரங்களுக்கும் இலவச கல்வி ஆலோசனைகளுக்கும் எமது பயிற்சி மையத்தை நாடுங்கள்


## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா சுப்பிரமணியம்

வலந்தலை, காரைநகரைச் சேர்ந்த திருமதி கனகம்மா சுப்பிரமணியம் நேற்று (03.03.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் கணேசரஞ்சினி, கணேசமூர்த்தி (ஆசிரியர், யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.) ஆகியோரின் அன்புத் தாயாரும் கந்தசாமி (லிங்கம் தொலைத் தொடர்பு நிலையம், காரைநகர்), புவனேஸ்வரி (தாதிய உத்தியோகத்தர், யாழ்போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ரீபவன், பிரசாந்தன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2003) செவ்வாய்க்கிழமை மாலை 3மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வலந்தலை,*
*காரைநகர்.*

(C/26787)

தகவல்:
சு.கணேசமூர்த்தி (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.